பக்கங்கள் - 26

# காலை முரசு




முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | மார்கழி 10 வியாழக்கிழமை 25.12.2025 | அதிர்வு 147



# சமஷ்டி ஆட்சி முறைமையே தமிழ் மக்களின் அபிலாஷை!

## மாகாண சபைத் தேர்தல் மட்டும் தீர்வு அல்ல என்று ஊடக சந்திப்பில் கஜேந்திரகுமார் எம்.பி.சுட்டிக்காட்டு

(அஷ்ரப் ஏ சமத்)

"மாகாண சபைத் தேர்தலை நடத்தவும் 13ஆம் திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தவும் இந்திய வெளிவிவகார அமைச்சரை இலங்கைத் தமிழரசுக் கட்சியும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியும் கோரின. வெறும் மாகாண சபைத் தேர்தலை நடத்துவது தீர்வல்ல என்பதே எமது நிலைப்பாடு. தமிழ்த் தேசம் அங்கீகரிக்கப்பட்ட சமஷ்டி ஆட்சி முறைமைதான் தமிழ் மக்களின் அபிலாஷை."

- இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் 03



# சவால்களை வென்று ஒரு நாடாக ஒன்றிணைந்து மீண்டெழுவோம்!

## கிறிஸ்துமஸ் வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி தெரிவிப்பு

"யதார்த்தத்தின் வேதனையான உண்மையை எதிர்கொண்டு, சவால்களை வென்று ஒரு நாடாக ஒன்றிணைந்து மீண்டெழுவோம்."

– என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க விடுத்துள்ள நத்தார் (கிறிஸ்துமஸ்) வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். 06




தமிழ்த் தேசியக் கட்சிகள் தங்களுக்குள் பிளவு பட்டு, ஒருவரை ஒருவர் கால்வாரியதன் காரணமாக முல்லைத்தீவு கரைத்துறைபற்றுப் பிரதேச சபைத் தலைமைப் பதவியை தேசிய மக்கள் சக்தியிடம் இழந்து பரிதவிக்கும் நிலைமை தமிழ்க் கட்சிகளுக்கு ஏற்பட்டுள்ளமை தெரிந்ததே.

கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்புக்கு வந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரை தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் கொழும்பு இந்திய ஹவுஸில் சந்திப்பதற்கு முன்னர், அருகில் ஒரு விடுதியில் ஒன்று கூடி தமக்குள் பேசினார்கள். தமிழரசுக் கட்சி, ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆகியவற்றின் தலைவர்களே இச்சந்திப்பில் பங்கு பற்றினர்.

அப்போது கரைத்துறைப்பற்றுப் பிரதேச சபையை இழந்தமை குறித்து அவர்கள் தங்களுக்குள் வருத்தம் தெரிவித்துக் கொண்டனர். பறிகொடுத்த கரைத்துரைப்பற்று 05

# திஸ்ஸ விகாரையை அகற்ற முற்பட்டால் கிளர்ந்தெழுவோம்!

## இப்படி மொட்டுக் கட்சி மிரட்டல்

"தையிட்டி திஸ்ஸ விகாரை விடயத்தில் எமது பொறுமையை மீண்டும் மீண்டும் சோதிக்கக்கூடாது. இலங்கை பௌத்த நாடென்பதை தமிழ் அரசியல்வாதிகள் ஏற்கவேண்டும்."

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினரும் முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சருமான சரத் வீரசேகர தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்தாவது:-

"திஸ்ஸ விகாரைக்கு அழுத்தம் கொடுத்து, அதனை அகற்றுவதற்கு முற்பட்டால் அதற்கு எதிராக நாங்கள் கிளர்ந்தெழுவோம்.

யாழ்ப்பாணத்தில் இராணுவத்தின் வசமிருந்த காணியில் 98 சதவீதம் விடுவிக்கப்பட்டுள்ளது. எனவே, திஸ்ஸ விகாரை தொடர்பில் அநீதியான தகவல்களைப் பரப்பக்கூடாது.

இலங்கை பௌத்த நாடென்பதை



கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சிவஞானம் சிறீதரன் உள்ளிட்டோர் புரிந்துகொள்ள வேண்டும். இதனை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

திஸ்ஸ விகாரையில் பௌத்த மக்களுக்குரிய வழிபாட்டு உரிமை மறுக்கப்படுகின்றது. அதற்கு எதிராக கஜேந்திரகுமாரின் ஆட்கள் வந்து போராட்டம் நடத்துகின்றனர்.

ஆனால் இவர்கள் கொழும்புக்கு வந்து சுதந்திரமாக கோயிலுக்குச் செல்லும் நிலை காணப்படுகின்றது. இலங்கை பௌத்த நாடென்பதால்தான் இது சாத்தியப்படுகின்றது.

இலங்கையில் வேறொரு மதம் பெரும்பான்மையாக இருந்திருந்தால், அந்த மதத்துக்கு எதிராக செயற்பட்டு விட்டு சுதந்திரமாக இருக்க முடியுமா? பௌத்த தர்மம் ஊடாக வழங்கப்பட்ட போதனைகளால்தான் பொறுமை காக்கின்றோம். ஆனால் அந்த பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

அதேவேளை, தமிழர் தாயகத்தில் விகாரை கட்ட முடியாது என யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் குறிப்பிடுகின்றது. இது தொடர்பில் இலங்கையில் உள்ள அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் நிலைப்பாடு என்ன? வடக்கு, கிழக்கில் உள்ள பௌத்த மரபுரிமைகளை நாசமாக்கும் நிகழ்ச்சி நிரல் முன்னெடுக்கப்படுகின்றது." – என்றார்.





# தையிட்டி போராட்டக்காரர்களுக்கு பொலிஸாரால் கடும் சித்திரவதை!

## வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு முறைப்பாடு

"யாழ். தையிட்டி சட்டவிரோத விகாரைக்கு எதிராக, அமைதி வழியில் போராடியவர்களைப் பொலிஸார் கடுமையாகச் சித்திரவதை செய்துள்ளனர். இந்தப் பாரதூரமான மனித உரிமை மீறல்கள் தொடர்பில், நீதியான அணுகுமுறைகளுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்."

– இவ்வாறு வெளிநாட்டுத் தூதரகங்கள் மற்றும் சர்வதேச மனித உரிமைகள் ரீதியிலான நிறுவனங்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் அனுப்பியுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"பௌத்த சிங்கள ஆக்கிரமிப்பை எதிர்த்த வேளை, இடம்பெற்ற தாக்குதல் என்பதால், இதற்கு ஒரு போதும் நீதி கிட்டாது என்பதை நாம் உணர்கின்றோம்.

அரச கொள்கையும், சட்டங்களும், சட்ட அமுலாக்கமும் பௌத்த சிங்களப் பேரினவாத ஆக்கிரமிப்புக்கு வலுச்சேர்ப்பவையாகவே பேணப்படுகின்றன.

நீதிமன்றத்தின் உத்தரவுகளை மதித்தே நாம் போராடினோம்.

எனவே, எம் மீது பொலிஸார் பிரயோகித்த சித்திரவதைகள் தொடர்பாக, இலங்கையில் உள்ள பிரதான நாடுகளின் வெளிநாட்டுத் தூதரங்கள், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் தொடர்பான நிறுவனங்கள், சித்திரவதைக்கு எதிரான சர்வதேச தாபனங்கள், இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள், உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் உள்ள மனித உரிமைகள் நிறுவனங்கள் மற்றும் ஏனைய தாபனங்களும் தலையிட வேண்டும்.

இது தொடர்பில் ஆதாரங்களுடன் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது." – என்றுள்ளது.

## சமஷ்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம். பி. தெரிவித்தார்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சுப்பிரமணியம் ஜெய்சங்கரைத் தமிழ்த் தேசியக் கட்சிகள் நேற்றுமுன் தினம் சந்தித்துப் பேசின. இதில், கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் பங்கேற்றிருந்தார். இந்தச் சந்திப்பு தொடர்பிலும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணயின் தமிழ்நாடு பயணம் தொடர்பிலும் விளக்கமளிக்கும் விதமாக அவர் நேற்று கொழும்பிலுள்ள தனது இல்லத்தில் ஊடகவியலாளர் சந்திப்பை நடத்தினார். இதிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

“இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கருடனான சந்திப்பின்போது இலங்கைத் தமிழரசுக் கட்சியும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியும் வெறுமனே வந்து ஒற்றையாட்சிக்குள் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதை வலியுறுத்தியும்,13ஆம் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவது குறித்தும் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தனர். தமிழரசுக் கட்சியின் தலைவர் சி.வி.கே. சிவஞானம் பல தடவைகள் வலியுறுத்தியது 13ஆம் திருத்தம். ஆனால், இந்தியாவின் பிள்ளைதான் அந்த 13ஆவது திருத்தச் சட்டம். அதனைக் கைவிடுவதை இந்தியா விரும்பாது.

2009 மே மாதத்தில் போர் முடிவுக்கு வந்தபோது அப்போதிருந்த அரசு வெறுமனே பயங்கரவாதப் பிரச்சினை மட்டுமே இருந்தது. அதனை இராணுவத் தீர்வின் மூலம் தீர்த்து விட்டோம். இலங்கையில் பிரச்சினை இல்லை எனக் கூறினார்கள். ஆனால், சர்வதேச சமூகம் அந்தக் கருத்தை நிராகரித்தது. அத்துடன், விடுதலைப்புலிகளின் போர் 1970இல் தான் ஆரம்பமானது. ஆனால், 1948 ஆம் ஆண்டிலிருந்தே இனங்களுக்கிடையே முரண்பாடு உள்ளது. அன்றைய அரசமைப்பைத் தமிழ்த் தலைவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை எனக் சுட்டிக்காட்டினார்கள்.

பிரித்தானியாவில்கூட ஐரிஸ் மக்களுக்குப் பிரச்சினை அன்றிருந்தது. அவர்களுக்கு உரிய அரசமைப்பை ஏற்படுத்தி தீர்வு பெற்றுக்கொடுத்தனர். இந்தியா மூன்றாவது வல்லரசு. அவர்கள் பொருளாதாரத்திலும் எதிர்காலத்தில் இரண்டாவது வல்லரசு நாடாக வரக்கூடிய சந்தர்ப்பம் உள்ளது. இந்தியாவின் கருத்துக்களை மீறி மற்ற நாடுகள் எந்த முடிவையும் இலேசாக எடுக்க முடியாது. தமிழ் மக்களின் பிரச்சினையில் இந்தியா அக்கறை செலுத்தி 1987இல் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது.

ஆகவே, இனப் பிரச்சினையைத் தீர்ப்பதில் இந்தியாவுக்குக் கடமை இருக்கின்றது. தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதற்கு இந்தியாவுக்குக் கடமை இருக்கின்றது. இந்தியாவின் நலன் – பாதுகாப்பில்தான் இந்திய – இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. ஆகவே, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஒரு தமிழ்த் தேசம் அங்கீகரிக்கப்பட்ட சமஷ்டி ஆட்சி முறைமை மட்டும்தான் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷையைப் பூர்த்தி செய்யக்கூடியது. – என்றார்.



# இந்நாட்டில் சிறந்ததோர் எதிர்காலத்துக்காக ஒன்றிணைந்து செயற்பட உறுதி பூணுவோம்!

## கிறிஸ்துமஸ் வாழ்த்துச் செய்தியில் பிரதமர் தெரிவிப்பு

"இலங்கையில் சிறந்ததோர் எதிர் காலத்துக்காக ஒற்றுமை, அன்பு மற்றும் பரிவுணர்வுடனும் பொறுப்புடனும் ஒன்றி ணைந்து செயற்பட நாம் அனைவரும் இந்த நத்தார் தினத்தில் உறுதி பூணு வோம்."

– இவ்வாறு பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய விடுத்துள்ள நத்தார் (கிறிஸ் துமஸ்) வாழ்த்துச் செய்தியில் தெரிவித் துள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள தாவது:–

"டிசம்பர் மாத பிறப்புடன், கிறிஸ்தவர்க ள் நத்தார் பண்டிகையைக் கொண்டாடத் தயாராவார்கள். அமைதியின் செய்தியை ஏந்தியவராக பாலகர் இயேசுவின் பிறப்புச் செய்தி பெத்லகேம் நகரில் இருந்து உலகை வந்தடைந்த அந்த நத்தார் தினத்தை மகிழ்ச்சியுடன் கொண்டாடுவதே கிறிஸ்தவ மக்களின் எதர்பார்ப்பாகும். ஆனால் இந்தக் குளிர் கால டிசம்பர் மாதம் வழக்கமான மகிழ்ச்சி அல்லது உற்சாகத்துடன் விடியவில்லை. முழு நாட்டையும் உலுக்கிய இயற்கைப் பேரனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட ஆயிரக்



கணக்கான எமது சகோதர சகோதரிகளின் துன்பங்கள் மற்றும் பெருமூச்சுகளுக்கு மத்தியிலேயே அதனை நாம் அடைந்தோம்.

எனினும், நத்தார் தினத்தின் உண்மை யான அர்த்தத்தை மனதில்கொண்டு, இயேசுவின் வழிகாட்டுதலைப் பின்பற்றி, எமது நாட்டு மக்கள், அனைத்து வேறு பாடுகளையும் மறந்து, ஒற்றுமையாகவும் ஐக்கியமாகவும் ஒன்றுபட்டு, பாதிக்கப்பட்ட தங்கள் சக குடிமக்களுக்காக அன்பு, கருணை மற்றும் இயேசு போதித்த "மற்ற வர்களை நேசித்தல்" என்ற மகத்தான நன்னெறியினை உலகுக்கு எடுத்துக் காட்டியிருக்கின்றனர்.

நாட்டை இயல்பு நிலைக்கு மீட்டெடுக் கும் பணிக்காக அனைத்து இனங்களும் ஒரே குறிக்கோளுடனும் கூட்டுப் பொறுப் புடனும் தேசத்தின் எதிர்காலத்துக்காக ஒன்றுபட வேண்டிய ஒரு காலகட்டத்தை நாம் இப்போது அடைந்திருக்கின்றோம்.

உண்மையான மாற்றத்தை எதிர் பார்த்த இலட்சக்கணக்கான மக்களின் நம்பிக்கைகள் எந்த வகையிலும் வீண் போகாத வகையில் அவர்கள் எதிர்பார்க் கும் "வளமான நாடு – அழகான வாழ்க்கை"யை உருவாக்கும் ஒரே நோக்கத்துக்காக நாம் தொடர்ந்து பாடுபட்டு வருகின்றோம்.

சிறந்ததோர் எதிர்காலத்தை நோக்கிய எம் எல்லோருடைய அந்தக் கனவுக்காக, குடிமக்கள் என்ற வகையில் ஒற்றுமை, அன்பு மற்றும் பரிவுணர்வுடனும் பொறுப் புடனும் ஒன்றிணைந்து செயற்பட நாம் அனைவரும் இந்த நத்தார் தினத்தில் உறுதி பூணுவோம். இலங்கை மற்றும் உலகெங்கிலும் உள்ள அனைத்து கிறிஸ்தவர்களுக்கும் இனிய நத்தார் நல்வாழ்த்துக்கள்!" – என்றுள்ளது.

---



# அநுர அரசு இன்னும் ஓராண்டில் கவிழும்!

## இப்படி அர்ச்சுனா எம்.பி. ஆரூடம்

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசு இன்னும் ஓராண்டில் கவிழும் என்று யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா தெரிவித்தார்.

கொழும்பு கோட்டை பொலிஸாரால் நேற்று முற்பகல் கைது செய்யப்பட்ட அர்ச்சுனா எம்.பிக்குப் பிற்பகல் பிணை வழங்கப்பட்டது.

பிணையில் வெளிவந்த பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியி டுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

"தேசிய மக்கள் சக்தியின் கொழும்பு மாநகர சபையின் வரவு – செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டுள்ளது. ஏனைய சபைகளிலும் இந்த நிலைமை ஏற்பட லாம்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க எனும் கப்பலில் தற்போது ஓட்டை விழ ஆரம்பித்துள்ளது. அந்த ஓட்டையை மூடுவதற்கு நாமும் முயற்சித்தோம். எனினும், அந்த முயற்சி கைகூடவில்லை.

இன்னும் ஓராண்டில் தேசிய மக்கள் சக்தி ஆட்சி கவிழும்.

எனக்குக் கொழும்பில் அரசியல் செய்யும் திட்டம் இல்லை. வடக்கு மக்கள் என்னை இங்கு அனுப்பமாட்டார்கள்.

அதேவேளை, தையிட்டி விகாரையை இடிக்குமாறு நயினாதீவு நாகவிகாரையின் விகாராதிபதி கூறுகின்றார். அவரின் அரசியலால் மக்கள் மத்தியில்தான் குழப்பம் ஏற்படப் போகின்றது." – என்றார்.

# பலாலி விமான நிலையத்தில் துரித அபிவிருத்தி அவசியம்!

## ஜெய்சங்கரிடம் கஜேந்திரகுமார் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம் – பலாலி விமான நிலையத்தில், விரிவான அபிவிருத்தி அவசியம் என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கரிடம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம் பலம் எம்.பி. சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜெய்சங்கருக்கும், தமிழ்த் தேசியக் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையில் கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

"யாழ்ப்பாணம் – பலாலி விமான நிலையத்தில் முதற்கட்ட அபிவிருத்தி மட்டும்தான் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஓடுதளத்தை முழுமையாகச் சீரமைத்தால் மட்டுமே கணிசமான பயன்களைப் பெறமுடியும்.

ஓடுதளத்தை விரிவாக்கினால் 320, 321 விமானங்கள் வந்து இறங்கக்கூடிய நிலைமை உருவாகும். இது வடக்கின் அபிவிருத்தியிலும் நல்ல மாற்றங்களை ஏற்படுத்தும்." – என்றும் கஜேந்திரகுமார் எம்.பி. சுட்டிக்காட்டியுள்ளார்.



இதையடுத்து, இந்த விடயம் தொடர்பில் இந்தியா இன்னும் ஆழமாக ஆலோசித்து தீர்மானம் எடுக்கும் என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் இதன்போது கூறியுள்ளார்.

---

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதேச சபையின் வரவு - செலவுத் திட்டம் விரைவில் சமர்ப்பிக்கப்படும் போது, தமிழ்க் கட்சிகள் ஒன்றுபட்டு நின்று அதை தோற்கடிப்பதன் மூலம் தாங்கள் இனிமேல் ஒன்றுபட்டு செயல்படுவோம் என்பதை வெளிப்படுத்த முடிவு செய்திருக்கின்றன எனத் தெரிகின்றது.

இந்த இணக்கம், உடன்பாடு, பிரதேச சபைத் தலைவர் தெரிவுக்கு முன்னர் நடந்திருந்தால், அது வரவேற்கத்தக்கதாக இருந்திருக்கும். 'குதிரை ஓடிய பின் லாயத்தை மூடிப் பயன் என்ன?' என்று கேட்கத்தான் தோன்றுகின்றது.

* * *

இன்று ஒரு வழக்குப் பற்றிய விடயத்தையும் மேலதிகமாகத் தரலாம் என்று நினைக்கிறேன்.

அண்மையில் பேரிடர் ஏற்பட்ட போது, கொழும்பு நோக்கிச் சென்ற பஸ் ஒன்று பாலத்தில் வெள்ளத்துக்குள் சிக்கிய சமயம், அதிலிருந்த எழுபதுக்கும் மேற்பட்ட பயணிகள் சுமார் 29 மணி நேரம் ஒரு வீட்டின் கூரையில் மழை வெள்ளத்துக்குள் தஞ்சம் புகுந்த நிலையில் பின்னர் மீட்டுக் காப்பாற்றப்பட்டமை பற்றிய செய்தி எல்லோரும் அறிந்த விடயம்தான்.

கலாவெவ வெள்ளப்பெருக்கினால் ஏற்பட்ட இந்த சம்பவத்தில் உயிரிழந்த வங்கி ஊழியரின் மரணம் தொடர்பான வழக்கே நேற்று நொச்சியாகம நீதிவான் ஜமீல் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது உயிரிழந்த இளைஞரின் குடும்பத்தவர்களின் நலன் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் மன்றில் முன்னிலையானார்.

இந்த வழக்கில், சம்பந்தப்பட்ட சாரதி கொலை முயற்சி குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கிறார். அவர் நேற்று மன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

அப்போது உயிரிழந்த வங்கி ஊழியரின் குடும்பத்தவர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி சுமந்திரன், அந்த பஸ் சாரதி மீது நேரடியாகக் கொலைக் குற்றம் சுமத்தப்பட்டமை தவறு என்பதைச் சுட்டிக்காட்டினார்.

கவனயீனத்தால் ஏற்பட்ட உயிரிழப்புக்குத் தண்டனைச் சட்டக் கோவையின் 297, 298 ஆகியவற்றின் பிரிவுகளில் குற்றம் சுமத்தப்பட முடியும் என்பதை அவர் நீதிமன்றத்திற்குத் தெரியப்படுத்தினார்.

அது மாத்திரமல்ல, ராஜாங்கனை நீர்த்தேக்கம் நிரம்பியதால் திடீரென அது திறந்து விடப்பட்டது. முன்னறிவித்தலின்றி அது திறந்து விடப்பட்டமையால் ஏற்பட்ட வெள்ளமே இந்த அனர்த்தம் நேர்வதற்கு காரணம். அப்படி நீர்த்தேக்கத்தைத் திறந்து விடும் முடிவை எடுத்தவர்கள், போக்குவரத்து வீதியும் பாலமும் அதனால் திடீரென வெள்ளத்தில் மூழ்கும் என்ற விடயத்தை கவனத்தில் எடுத்து, போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் - அறிவிப்புகளை வெளியிட்டிருக்க வேண்டும். - ஆனால் வெளியிடவில்லை.

அது விடயத்தில் அனர்த்த முகாமைத்துவ திட்டக் குழு தவறிழைத்திருக்கின்றது. அது மாத்திரமல்ல, வெள்ளம் காரணமாக அந்த பாலம் மற்றும் வீதியூடாகப் போக்குவரத்து இடம்பெறக்கூடாது என்று தடுக்க வேண்டிய பொலிஸார் அன்றைய தினம் எந்த வாகனத்தையும் தடுக்கவில்லை. வீதியில் அவர்கள் தென்படவே இல்லை, அதனால்தான் அந்த பஸ் அந்தப் பாதையில் அன்றைய தினம் பயணம் செய்திருக்கின்றது. அப்படியாயின் அந்த பஸ் அன்று வெள்ளத்தில் சிக்கியதற்குப் பொலிஸ்தான் காரணம். அப்பகுதிக்குப் பொறுப்பான ராஜாங்கனை பொலிஸார்தான் இந்தக் குற்றத்தை இழைத்திருக்கிறார்கள். ஆனால் அவர்களே பஸ் சாரதியையும் கைது செய்து, கொலைக் குற்றத்தையும் அவர் மீதே சுமத்தி இருக்கிறார்கள். கொலைக் குற்றத் தவறிழைத்தவர்கள் இன்னொரு தரப்பு மீது கொலைக் குற்றம் சுமத்தும் அபத்தம் இங்கு நிகழ்ந்திருக்கின்றது என்று, சுமந்திரன் மன்றில் கூறினார்.

இவற்றைக் கவனத்தில் எடுத்த நீதிவான், வரும் ஏழாம் திகதி இந்த வழக்கு மீண்டும் நீதிமன்றத்தில் எடுக்கப்படும் போது, மன்றில் முன்னிலையாகும்படி பேரிடர் நிர்வாகக் குழுவின் இயக்குநர் நாயகத்தையும் ராஜாங்கனைப் பொலிஸ் பிரிவின் பொலிஸ் அத்தியட்சகரையும் மன்றில் ஆஜராக நேற்று உத்தர விட்டிருக்கின்றார்.

குற்றம் நிகழக் காரணமான பொலிஸார், அதைத் தடுக்காமல் தாம் தவறிழைத்து விட்டு, இன்னொரு தரப்பு மீது அதே கொலைக் குற்றம் சுமத்துவது தவறு என்று சுட்டிக் காட்டிய சுமந்திரன், அதன் காரணமாக இந்த வழக்கை ராஜாங்கனைப் பொலிஸாரிடமிருந்து மாற்று மாறும் கோரியிருந்தார். அது பற்றியும் நீதிமன்றம் அடுத்த தவணையில் தீர்மானிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நொச்சியாகம நீதிமன்றத்தில் இந்த வழக்கு எடுக்கப்படும் சமயத்தில் அதன் நகர்வு பற்றிய விடயங்கள் வாசகர்களுக்கு அதிக முக்கியமானவையாக இருக்கும் என்று நினைக்கிறேன். அந்தந்த தவணைக்காலத்தில் அது பற்றிய தகவல்களை அவ்வப்போது தருவேன்.

# தையிட்டியில் 2 ஏக்கர் காணியை விடுவிக்க என்.பி.பி. அரசு திட்டம்?



யாழ். தையிட்டியில் திஸ்ஸ விகாரைக்காக ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளில், அண்ணளவாக இரண்டு ஏக்கர் காணிகளை விடுவிப்பதற்கு தேசிய மக்கள் சக்தி அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனத் தெரியவருகின்றது.

திஸ்ஸ விகாரைக்காக அண்ணளவாக 8 ஏக்கர் வரையான பொதுமக்களின் காணிகள் அபகரிக்கப்பட்டுள்ளன. அந்தக் காணிகளை விடுவிக்க வேண்டும் என்று கடந்த பல வருடங்களாக மக்கள் தொடர்ச்சியாகப் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். இதன் தொடர்ச்சியாகவே, தற்போது அண்ணளவாக 2 ஏக்கர் காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரியவருகின்றது.

8 குடும்பங்களுக்குச் சொந்தமான காணிகளே இவ்வாறு விடுவிக்கப்படவுள்ளன. காணிகள் விடுவிக்கப்பட்ட பின்னர் எல்லை அமைக்கும் பணிகளுக்காக ஒருதொகுதி நிதியும் கிடைத்துள்ளது என்று கூறப்படுகின்றது.

இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு விரைவில் வெளியிடப்படும் என்றும் நம்பப்படுகின்றது.

# இந்துக்களுக்கு உள்ள சுதந்திரம் பௌத்தர்களுக்கு இல்லையாம்!

## முன்னாள் அமைச்சர் அனுருத்த காட்டம்

இலங்கையில் இந்துக்களுக்கு உள்ள சுதந்திரம் பௌத்தர்களுக்கு இல்லை என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான இந்திக்க அனுருத்த காட்டமாகத் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

"ஜனாதிபதி அநுரகுமார தலைமையிலான குழுவினர் ஆட்சியைக் கைப்பற்றினால், புலம்பெயர் தமிழர்களைத்



திருப்திப்படுத்துவதற்காக தமிழர்களின் பகுதிகளில் உள்ள விகாரைகளும், இராணுவ முகாம்களும் அகற்றப்படும் என்று சுட்டிக்காட்டியிருந்தோம். தற்போது அத்தகைய செயல்களே இடம்பெற்று வருகின்றன.

புலம்பெயர் தமிழர்களின் தேவைக்கு ஏற்பவே அநுர அரசு செயற்பட்டு வருகின்றது. இனவாதமும், மதவாதமும் நாட்டில் இருக்கக்கூடாது என்பதை நாங்கள் ஏற்கின்றோம். ஆனால், தெற்கில் இந்துக்களுக்கு இருக்கும் சுதந்திரம் வடக்கில் பௌத்தர்களுக்கும் இருக்க வேண்டும்." - என்றார்.

## சவால்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"உலகம் முழுவதும் உள்ள கிறிஸ்தவர்கள் இயேசு கிறிஸ்து பிறந்த தினமான நத்தார் பண்டிகையை இன்று கோலாகலமாகக் கொண்டாடி வருகின்றனர். இலங்கையர்களாகிய நாம், ஒரு நாடாக மிகவும் வேதனையான இயற்கைப் பேரழிவை எதிர்கொண்ட பிறகு உறுதியுடன் மீண்டு வரும் சந்தர்ப்பத்திலேயே இந்த நத்தார் பண்டிகையைக் கொண்டாடுகின்றோம் என்பது அனைவரும் அறிந்த விடயம்.

அன்பு, அமைதி, மகிழ்ச்சி, பகிர்வு மற்றும் தியாகம் ஆகியவையே நத்தார் பண்டிகையின் உண்மையான அர்த்தங்கள் ஆகும். பாதிக்கப்பட்டவர்களுக்கு சகோதர உணர்வுடன் ஆதரவு வழங்குதல் மற்றும் மனிதகுலத்தின் விடுதலைக்கான அர்ப்பணிப்பு என்பன இவற்றில் முதன்மையானதாகும்.

கிறிஸ்தவம் உட்பட அனைத்து மதங்களின் போதனையான, இக்கட்டான காலங்களில் அயல் வீட்டாரை கைவிடாமல் சகோதரத்துவத்துடன் அரவணைக்கும் உன்னதமான மனித பண்பையும் அசைக்க முடியாத உறுதியையும் கடந்த அனர்த்த நிலைமையில் இந்நாட்டு மக்கள் மீண்டும் மீண்டும் நிரூபித்துள்ளனர்.

அமைதி, நல்லிணக்கம், தியாகம் மற்றும் இரக்க குணம் கொண்ட ஒரு சமூகத்தை உருவாக்க அழைப்பு விடுக்கும் புனித நத்தாரின் அர்த்தத்தை உண்மையில் புரிந்துகொண்டதனாலேயே ஒருபோதும் பயணிக்க எதிர்பார்க்காத வீதிகளில்கூட தமது சகோதர மக்களுக்காக அத்தியாவசியப் பொருட்களை மக்கள் சுமந்து சென்றார்கள் என்று நான் நம்புகின்றேன்.

இருள் நீங்க வேண்டுமானால், ஒளியின் பிரகாசம் பரவ வேண்டும். பெத்லகேமில் ஒரு ஏழைத் தொழுவத்தில் பிறந்து, கல்வாரி மலைப் பகுதியில் மனித சமூகத்தைப் பாவத்திலிருந்து மீட்க சிலுவையில் தன்னை அர்ப்பணித்த இயேசு, மிகுந்த உறுதியுடனும் நம்பிக்கையுடனும் ஞானத்துடனும் மரணத்தை வென்று உயிர்த்தெழுந்தார் என்று கிறிஸ்தவம் கூறுகின்றது.

யதார்த்தத்தின் வேதனையான உண்மையை எதிர்கொண்டு, சவால்களை வென்று ஒரு நாடாக ஒன்றிணைந்து மீண்டெழுவோம் என்று அனைவருக்கும் அழைப்பு விடுத்து, அமைதி, மகிழ்ச்சி, மனிதநேயம், இரக்கம் மற்றும் கருணை ஆகியவற்றால் நிறைந்த இனிய நத்தார் பண்டிகையாக அமைய வேண்டும் என்று அனைவரையும் வாழ்த்துகின்றேன்." - என்றுள்ளது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# அன்பைப் போதித்த மகான்

அன்பின் பேரொளி, சமாதானப் பிரபு, இறை தூதுவர் ஏசுபிரான் அவதரித்த கிறிஸ்மஸ் திருநாள் இன்று.

மனிதகுலத்தின் பாவங்களுக்குக் கழுவாயாகக் கடவுள் மனித வடிவில் உலகில் வந்தார் என்று நம்புவதே கிறிஸ்துமஸ் கொண்டாடுவதன் முதன்மை நோக்கமாகக் கருதப்படுகிறது.

இயேசுவின் பிறப்பு அவர் நம் மீது வைத்திருக்கும் பேரன்பை குறிக்கிறது. அன்பை உணர்த்துவதே கிறிஸ்துமஸ் பண்டிகை. அன்பின் வடிவாகவே தேவனின் திருக்குமரன் உலகில் அவதரித்தான். கிறிஸ்துவின் வருகை மனுக்குலத்துக்குச் சொல்லும் செய்தி ஒன்றுதான். அது - அன்பு கொண்டேகுங்கள் என்பதுதான்.

உலகத்தில் உள்ள மனிதர்கள் ஒருவருக்கொருவர் அன்பாக இருப்பார்கள். ஆயினும் அந்த அன்பில் எதிர்பார்ப்பு இருக்கும். ஏதோ ஒன்றை எதிர்பார்த்தே அன்பு செலுத்துகிறார்கள். ஆனால் இயேசுவின் அன்பு எந்த வித எதிர்பார்ப்பும் இல்லாத அன்பு. நம்மை இந்த உலகத்தின் பாவத்தில் இருந்து மீட்க வந்து தன் உயிரை கொடுத்த உன்னத அன்பு. மக்களைப் பாவங்களில் இருந்து மீட்டுப் பரலோக ராஜ்ஜியத்திற்கு சேர்க்க வந்த பாச அன்பு.

அவரது பிறப்பே இந்த உலகுக்கு மாபெரும் செய்திகளை உணர்த்தியது. எளிமை, அன்பு, பணிவு, மன்னித்தல், இறை வணக்கம், உண்மை, உறுதி என்ற இந்த ஏழு முக்கிய நற்குணங்களை ஏசு பிரானின் வாழ்க்கை நமக்கு உணர்த்தியது. பாவங்களால் கனத்திருந்த மனிதர்களின் இதயம் புனிதம் அடையவும், இழி செயல்களால் அழியவிருந்த உலகத்தை அன்பால் காக்கவும் அவதரித்தார் ஏசுபிரான்.

அவர் வாழ்க்கை தத்துவம் நமக்கு வெறும் அடையாளங்கள் மட்டுமல்ல. ஏசுவைக் கொண்டாடுவதைப் போலவே அவருடைய போதனைகளை, நல்லொழுக்கங்களைக் கொண்டாட வேண்டும் என்பதே நன்மை விளைவிக்கும் மானுட தர்மம்.

மரித்தவர் உயிர்த்தெழுந்த உன்னத விஷயத்தை உலகுக்குக் காண்பித்தவர் ஏசுபிரான் மட்டுமே. அவருடைய தியாகங்களே உலகுக்கு முன்மாதிரியாக இருக்கும் பெரும் பாடங்கள். மரணத்தின் வாயிலிலும் சத்தியத்தை கடைப்பிடித்த தேவசுதன் ஏசு. இறுதி நிமிடத்திலும் தன்னை இன்னலுக்கு ஆளாக்கியவர்களை மன்னிக்கச் சொல்லி தம் தந்தையிடம் பிரார்த்தித்த இணையில்லா அன்பு வடிவம் அவர்.

நாம் ஒருவருக்கு ஒருவர் அன்பு காட்டுவதே ஏசுபிரானுக்கு நாம் செய்யும் ஆராதனை. இறைமகன் ஏசுபிரான் தோன்றிய இந்த நன்னாளில் ஒழுக்கம், கருணை, உண்மை, அன்பு, பிரார்த்தனை போன்ற நல்ல விஷயங்களை நம் நெஞ்சில் ஏந்திக் கொள்வோம்.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு அவர் போதித்த அனைத்தும் உலக மக்களின் நல்வாழ்க்கைக்காக இன்றும் பொருந்துவதை நாம் காணலாம். அதனால்தானே உலகின் மணிமுடிகள் எல்லாம் இன்றும் ஏசுவின் முள்முடியின் கீழே பணிந்து நிற்கின்றன.

# சேதமடைந்த கோதண்டர்நொச்சிக்குளத்தை நேரில் பார்வையிட்டார் சத்தியலிங்கம் எம்.பி.

## திருத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை





அன்மையில் இடம்பெற்ற இயற்கை பேரிடர் காரணமாக வவுனியா மாவட்டத்தில் கோதண்டர்நொச்சிக்குளம் குளம் உடைப்பெடுத்திருந்தது. நேற்றுமுன்தினம் பெய்த மழையினால் மீண்டும் குளத்திற்கு நீர்வரத்து அதிகரித்துள்ள நிலையில் குளக்கட்டு உடைந்துள்ளமையால் நீரை சேமிக்க முடியாத நிலை காணப்பட்டது.

இந்தக் குளத்தின் கீழ் 160ஏக்கர் பயிர்ச்செய்கை மேற்கொள்ளக்கூடியதாக வயல் உள்ளது.

கோதண்டர் நொச்சிக்குளம் குளத்தை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் நேற்று நேரில் சென்று ஆய்வு செய்தார். வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் உதவி கமநல ஆணையாளர் ஆகியோருடன் விடயம் தொடர்பில் தொலைபேசியூடாக கலந்துரையாடப்பட்டது. கமக்காரர் அமைப்பு மற்றும் இராணுவத்தினரின் பங்குபற்றுதலுடன் பிரச்சினைக்கு தீர்வு காண உத்தேசிக்கப்பட்டது.

இதனையடுத்து அந்த இடத்திற்கு இராணுவத்தினர் வருகைதந்து இடத்தைப் பார்வையிட்டனர். ஓரிரு நாள்களில் உடைந்த குளக்கட்டை மீண்டும் புனரமைத்து நீரை சேமித்து நெற்செய்கையை மேற்கொள்ள ஒழுங்கு படுத்தப்பட்டது.

அத்துடன் கோதண்டர்நொச்சிக் குளம் கிராமத்தில் சேதமடைந்த முக்கிய வீதிகளை பார்வையிட்டமையுடன் அவற்றை உடனடியாக திருத்தம் செய்ய வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை தவிசாளர் மற்றும் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஆகியோருடன் பேசி நடவடிக்கை எடுக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.






# திருமலையில் ஓட்டோவைத் திருடிய கடற்படை அதிகாரி நேற்றுக் கைது!

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை கடற்படைத்தளத்தில் கடமையாற்றும் 38 வயதுடைய கடற்படை அதிகாரி தரத்தை சேர்ந்த ஒருவர், ஓட்டோ ஒன்றைத் திருடினார் என்ற சந்தேகத்தில் நேற்று அதிகாலை துறைமுக பொலிஸ் நிலையப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

காலி மாவட்டத்தை சொந்த இடமாக கொண்ட இவர் நேற்று முன்தினம் பகல் காலியில் இருந்து திருகோணமலை நோக்கி பஸ்ஸில் பயணித்தார். பயணத்தின் போது கைத்தொலைபேசியில் நிகழ் நிலை விளையாட்டில் (ஒன்லைன் பப்ஜி) ஈடுபட்டுள்ளார். அதில் ரூபா 5 இலட்சம் வென்றுள்ளார். இந்நிலையில் பயணத்தின் இடைநடுவில் குருநாகலில் இறங்கியுள்ளார். பின்னர் வங்கிக்கு சென்று வெற்றி பெற்ற பணத்தில் ரூபா 50 ஆயிரத்தை மீளப்பெற்றுள்ளார். அந்தப் பணத்தில் மது அருந்திவிட்டு பிக்மீ வாடகை வாகனத்தை ஒழுங்கு செய்து மீண்டும் திருகோணமலை நோக்கி பயணத்தை தொடர்ந்துள்ளார். பயணத்தின் போது மீண்டும் கைத்தொலைபேசியில் பப்ஜி விளையாடி உள்ளார். வாகனம் கந்தளாய்க்கு வந்த போது அவர் விளையாட்டில் பெற்று வங்கியிலிருந்த மிகுதி பணம் முழுவதையும் விளையாட்டில் தோற்றுள்ளார். இரவு 10 மணிக்கு திருகோணமலை மத்திய பஸ் நிலையத்திற்கு முன்பாக இறங்கியுள்ளார். அங்கிருந்து நடந்து வந்த இவர் நெல்சன் திரையரங்கிற்கு சென்று அங்கு தரித்து இருந்த ஓட்டோவைத் திருடி அதனை ஓட்டிச் சென்றுள்ளார். ஓட்டோவின் உரிமையாளர் இதனை அவதானித்து சிலருடன்ஓட்டோவைப் பின் தொடர்ந்து துரத்தி சென்றுள்ளார். அப்பொழுது ஓட்டோ குடைசாய்ந்து பிரண்டுள்ளது. அதனால் அவர் ஓட்டோவைக் கைவிட்டு ஓடி சென்றுள்ளார். இந்நிலையில் திருகோணமலை தலைமைப் பொலிஸ் நிலையத்திற்கு அண்மையில் வைத்து இவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

துறைமுகப் பொலிஸார் மேற்கொண்ட ஆரம்ப விசாரணையில் தமது குற்றத்தை அவர் ஏற்றுக்கொண்டுள்ளார். அத்துடன் தொடர்ச்சியாக பப்ஜி விளையாட்டில் ஈடுபட்டு இவர் ரூபா 50 இலட்சம் அளவில் கடனில் உள்ளார் எனவும் விசாரணையின் போது கூறியுள்ளார்.

திருமணமான இவருக்கு இரண்டு பெண் பிள்ளைகளும், மனைவியும் உள்ளனர். இதனை அடுத்து சந்தேக நபர் நேற்றுக் காலை 11.30 மணிக்கு திருகோணமலை நீதிவான் முன் முன்னிலைப்படுத்தப்பட்டு விளக்கமறியலுக்கு அனுப்பப்பட்டுள்ளார்.



# கிழக்குக்கான ரயில் சேவை ஆரம்பம்

(வ.சக்திவேல்)

இயற்கை அனர்த்தம் காரணமாக கடந்த ஒரு மாத காலமாக தடைப் பட்டிருந்த கிழக்கு மாகாணத்திற்கான ரயில் சேவைகள் மீண்டும் ஆரம்ப மாகின.

மட்டக்களப்பிரிருந்து, திருமலை, கொழும்பு ரயில் சேவைகள் மீண்டும் நேற்றுப் புதன்கிழமை தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சேதமடைந்திருந்த ரயில் பாதை களின் திருத்தப் பணிகள் யாவும் நிறைவடைந்ததன் பின்பு கடந்த சில நாள்களாக பரீட்சார்த்த சேவைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன. அதை அடுத்து நேற்றுப் புதன்கிழமை அதி காலை5மணிக்குமட்டக்களப்பில்இருந்து கொழும்புக்கான உதயதேவி சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

புதன்கிழமை காலை திருகோண மலையிலிருந்து கொழும்பிற்கான சேவையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பில் இருந்து செல்லும் பயணிகள் கல் ஓயா சந்தியில் இறங்கி திருமலையில் இருந்து வரும் கொழும்புக் கான ரயிலுக்கு மாற வேண்டும்.

இதேவேளை மாகோவில் இருந்து மட்டக்களப்புக்கான சரக்கு மற்றும் எரிபொருள் சேவைகளும் நேற்று புதன்கிழமை தொடக்கம் மீண்டும் முன்னெடுக்கப்பட இருந்தன என ரயில்வேத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.













உ
சிவமயம்

அகில இலங்கை இந்துமாமன்றம்
(இலங்கை இந்துமன்றஅமைப்புகளினதும் ஆலய நம்பிக்கைபொறுப்புகளினதும் ஒன்றியம்)
ALL CEYLON HINDU CONGRESS
(Federation of Hindu Religious Associations and Temple Trusts in Sri Lanka)

| தலைவர் | பொதுச் செயலாளர் | பொருளாளர் |
| --- | --- | --- |
| President: | Hony. General Secretary: | Hony. Treasurer: |
| அ.கயிலாசபிள்ளை | வேலுப்பிள்ளை கந்தசாமி | ச. க. குசலகுமாரன் |
| Abirami Kailasapillai | Velupillai Kandasamy | S. K. Kusalakumaran |
| Phone: 2575566 (Res) | Phone: 2586620 (Res) | Mobile: 077 952 6585 |
| Fax : 2575472 | Mobile: 071-5349150 | |
| hariomak@gmail.com | vkandasami@gmail.com | |

23.12.2025

**அகில இலங்கை இந்து மாமன்றத்தின கண்டன அறிக்கை**

போர்ச்சூழலில் இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்ட தனியார் காணியில் சட்ட விரோதமாகக் கட்டப்பட்டுள்ள தையிட்டி பௌத்த விகாரைக்கு எதிராகச் சாத்வீகமாகப் போராடிய மக்களையும் அதில் இணைந்திருந்த இந்து மதகுருவான நல்லூர் ஆதீன மதகுரு தவத்திரு வேலன் சுவாமிகளையும் மிலேச்சத்தனமாகத் தாக்கி வாகனத்திற்கு இழுத்துச் சென்று கைது செய்துள்ளமையை அகில இலங்கை இந்து மாமன்றம் வன்மையாகக் கண்டிக்கிறது.

இது போன்ற பொறுப்பற்ற சட்ட விரோத செயற்பாடுகளால் அமைதியின்மையும் வன்முறைகளும் அடக்குமுறையும் இராணுவத்தினராலும் பொலீசாராலும் திட்டமிடப்பட்டுத் தோற்றுவிக்கப்படுகிறது.

எனவே இது விடயத்தில் தலையிட்டு உடனடி விசாரணை நடாத்தி வன்முறையில் ஈடுபட்ட பொலீசார் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதுடன் தையிட்டி சட்ட விரோத பௌத்த விகாரை அமைக்கப்பட்ட நில உரிமையாளர்களின் நியாயமான பிரச்சனையைத் தீர்க்க வேண்டுமென ஜனாதிபதி அவர்களை அகில இலங்கை இந்து மாமன்றம் கேட்டுக்கொள்கிறது.

வே. கந்தசாமி
பொதுச் செயலாளர்

தலைமையகம்: இல.91/5,சேர். சிற்றம்பலம் ஏ. கார்டினர்மாவத்தை,கொழும்பு– 02, இலங்கை.
Head Office: No 91/5, Sir Chittampalam A. Gardiner Mawatha, Colombo – 02, Sri Lanka.
தொ.பேசி/Phone : 011 243 4990; 070 379 8333 www.hinducongress.lk
hinducongress@gmail.com

# வேலன் சுவாமியைக் கைது செய்த நடவடிக்கையை கடுமையாகக் கண்டித்து இந்து மாமன்றம் அறிக்கை

போர்ச்சூழலில் இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்ட தனியார் காணியில் சட்ட விரோதமாகக் கட்டப்பட்டுள்ள தையிட்டி பௌத்த விகாரைக்கு எதிராகச் சாத்வீகமாகப் போராடிய மக்களையும் அதில் இணைந்திருந்த இந்து மதகுருவான நல்லூர் ஆதீன மதகுரு தவத்திரு வேலன் சுவாமிகளையும் மிலேச்சத்தனமாகத் தாக்கி வாகனத்திற்கு இழுத்துச் சென்று கைது செய்துள்ளமையை அகில இலங்கை இந்து மாமன்றம் வன்மையாகக் கண்டிக்கிறது.

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் சார்பில் அதன் பொதுச் செயலாளர் வே.கந்தசாமி வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது போன்ற பொறுப்பற்ற சட்ட விரோத செயற்பாடுகளால் அமைதியின்மையும் வன்முறைகளும் அடக்குமுறையும் இராணுவத்தினராலும் பொலிஸாராலும் திட்டமிடப்பட்டுத் தோற்றுவிக்கப்படுகின்றன.

எனவே இது விடயத்தில் தலையிட்டு உடனடி விசாரணை நடத்தி, வன்முறையில் ஈடுபட்ட பொலீஸார் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதுடன் தையிட்டி சட்ட விரோத பௌத்த விகாரை அமைக்கப்பட்ட நில உரிமையாளர்களின் நியாயமான பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென ஜனாதிபதியை அகில இலங்கை இந்து மாமன்றம் கேட்டுக்கொள்கிறது. – என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பதுளையில் மணல் லொறி கவிழ்ந்தது





(நடராஜா மலர்வேந்தன்)

பதுளை, கஹடருப்ப பிரதான வீதியின் முத்துமாலா பகுதியில் நேற்று மணல் ஏற்றிச் சென்ற லொறி ஒன்று எதிரே வந்த மோட்டார் சைக்கிளுக்கு வழி விட முற்பட்டபோது வீதியைவிட்டு விலகி கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியது.

பதுளை மாவட்டத்தில் நிலவுகின்ற சீரற்ற மழையுடன் கூடிய காலநிலையால் பெரும்பாலான வீதிகளில் மண்மேடுகள் சரிந்து விழுந்துள்ளமை போன்று இந்த வீதியில் வழமையான போக்குவரத்துப் பாதையின் அகலம் குறுகியுள்ளமையே இவ்விபத்துக்குக் காரணமாகியுள்ளது.

இவ்விபத்தில் தெய்வாதீனமாக லொறியின் சாரதி காயங்களின்றி தப்பியுள்ளார்.



# கிறிஸ்துவப் பெருமதத்தில் ஒளியின் வடிவமாக இறைமகன் இயேசு...!

உலகின் எல்லா மதங்களும் ஒளியை முன்நிறுத்துகின்றன. சிறந்த முன்மாதிரியாக இருப்பவர்களை, வாழ்க்கைக்கு வழி காட்டும் ஒளியாகப் பார்க்கிறோம். கிறிஸ்துவப் பெருமதத்தில் ஒளியின் வடிவமாகப் பார்க்கப்படுகிறவர் இறைமகன் இயேசு. அவர் காட்டிய வழியில் அவரை நோக்கிய பயணமே சிறந்த ஆன்மிக வாழ்க்கை என்பதில் உலகின் பல பிரிவு கிறிஸ்துவர்கள் ஆழமான நம்பிக்கை வைத்துள்ளனர்.

ஏனென்றால், "நான் இந்த உலகத்துக்கு ஒளியாக இருக்கிறேன். என்னைப் பின்பற்றுகிற யாரும் ஒருபோதும் இருளில் நடக்க மாட்டார்கள், ஆனால் வாழ்வு தரும் ஒளியைப் பெற்றிருப்பார்கள்" என்று தன்னைத் தேடிப் பின்தொடர்ந்த மக்களிடம் சொன்னார். அதே போல், தன்னை விமர்சித்த யூதப் பழமைவாதிகளிடம் "கடவுள்தான் உங்கள் தகப்பன் என்றால், நீங்கள் என்மேல் அன்பு காட்டுவீர்கள். ஏனென்றால், நான் கடவுளிடமிருந்து இங்கே வந்திருக்கிறேன். நான் சுயமாக வரவில்லை, அவர்தான் என்னை இங்கே அனுப்பினார். நான் சொல்வதை ஏன் புரிந்துகொள்ளாமல் இருக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

இறந்த லாசரை இயேசு உயிர்பெறச் செய்தபோது உண்மையாகவே அவர்கள் பயந்துதான் போனார்கள். அப்போதுதான் இயேசுவின் பிறப்பு குறித்து அவர்கள் தேடத் தொடங்கினார்கள். உண்மையில் இந்த இயேசு பிறந்ததும் வளர்ந்ததும் எங்கே எனத் தேடியபோது, அவர் குழந்தையாகப் பிறந்தபோது சாட்சியாக இருந்த மேய்ப்பர்கள் இப்போது நடுத்தர வயதுக்காரர்களாக இருந்தார்கள். அவர்கள் யூதத் தலைமை குருவுக்கு அளித்த சாட்சியம் வரலாற்றில் மிக முக்கியமானதாக இருக்கிறது.

மார்கழிக் குளிருக்கு மத்தியில் இயேசு பிறந்திருந்த இடத்திலிருந்து சில கல் தொலைவில் இருந்த புல்வெளிகளில் சில மேய்ப்பர்கள் இரவு நேரத்தில் தங்கள் மந்தையைக் காவல் காத்துக்கொண்டு அங்கேயே கூடாரம் அமைத்துத் தங்கியிருந்தார்கள். திடீரென்று, ஒரு தேவதூதர் அவர்கள் முன்னால் வந்து நின்றார். அப்போது அந்த மேய்ப்பர்களைச் சுற்றி கடவுளாகிய தந்தையின் ஒளி பிரகாசித்தது. மேய்ப்பர்கள் மிகவும் பயந்து நடுங்கினார்கள்.

தங்களது சக்திக்கு மீறிய ஒன்று அங்கே நிகழ்ந்து கொண்டிருப்பதை உணர்ந்து கத்தினார்கள். தேவதூதர், அவர்களை அமைதிப்படுத்தினார். அவர்கள் தெளிவு பெற்றார்கள். அவர்களிடம் "பயப்படாதீர்கள், உங்களுக்கு ஒரு நல்ல செய்தி சொல்ல வந்திருக்கிறேன். மெசியா (உலகின் மீட்பர்) இன்று பெத்லகேமில் பிறந்திருக்கிறார். உடனே போய் அவரைப் பாருங்கள்" என்று சொன்னார். உடனே, அவரைப் போன்ற தோற்றம் கொண்ட பல தேவதூதர்கள் வானத்தில் தோன்றி, "வானுலகில் இருக்கிற கடவுளுக்குப் புகழ் சேரட்டும், பூமியில் சமாதானம் உண்டாகட்டும்" என்று சொன்னார்கள். பிறகு, அவர்கள் மறைந்துவிட்டார்கள்.

தங்கள் வாழ்நாளில் இப்படியொரு காட்சியை காண்போம் தேவசெய்தியைப் பெறுவோம் என்று எண்ணியிராத அந்த மேய்ப்பர்கள் மகிழ்ச்சியுடன் துள்ளிக் குதித்து.. "வாருங்கள், உடனே பெத்லகேமுக்குப் போகலாம்" என்று ஒருவருக்கொருவர் சொல்லிக் கொண்டு.. மந்தைகளை அப்படியே விட்டுவிட்டு வேகமாக அங்கிருந்து புறப்பட்டுப் போய் தெய்வக் குழந்தையைத் தேடினார்கள்.

ஒரு தொழுவத்தில் யோசேப்பையும் மரியாளையும் குழந்தையையும் அவர்கள் பார்த்தபோது, தேவதூதர் சொன்ன விஷயங்களைப் பற்றி மரியாளிடமும் யோசேப்பிடமும் பகிர்ந்துகொண்டதுடன், அந்தப் புலர் காலையில் கண்ணில்பட்ட பெத்லகேம் வாசிகளிடம் சாட்சியமாகச் சொன்னார்கள். அதைக் கேள்விப்பட்ட மக்கள் ஆச்சரியப்பட்டார்கள்.

மேய்ப்பர்கள் தங்கள் மந்தைகளைக் கவனித்துக் கொள்வதற்காகத் திரும்பிப் போனார்கள். தாங்கள் கேட்டதையும் பார்த்ததையும் நினைத்து கடவுளாகிய தந்தைக்கு நன்றி சொன்னார்கள்.

தொடர்ச்சி ▼

# கிறிஸ்துவப் பெருமதத்தில் ஒளியின் வடிவமாக இறைமகன் இயேசு...!

தொடர்ச்சி▲

கன்னி மரியாளோ தேவதூதர் தனக்குச் சொன்ன வார்த்தைகள் குறித்து நன்றாக யோசித்துப் பார்த்தார். கடவுள் வாக்களித்தபடியே மண்ணுலகத்துக்கு தன் மகனை அனுப்பி வைத்தார். அவரது பிறப்பு வரலாற்றின் முக்கிய நிகழ்வாக மாறியது.

கிறிஸ்மஸ் என்பது உலகெங்கிலும் உள்ள கிறிஸ்தவர்களால் கொண்டாடப்படும் ஒரு மிக முக்கியமான பண்டிகை. இது இயேசு கிறிஸ்துவின் பிறப்பைக் கொண்டாடும் ஒரு மகிழ்ச்சியான திருவிழாவாகும். ஒவ்வொரு ஆண்டும் டிசெம்பர் 25 ஆம் திகதி இப்பண்டிகை உலகமெங்கும் வெகுவிமரிசையாகக் கொண்டா



டப்படுகிறது.

சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, பெத்லகேம் என்னும் ஊரில் ஒரு மாட்டுத் தொழுவத்தில் இயேசு பிறந்தார். அவர் அமைதி, அன்பு மற்றும் மன்னிப்பு ஆகியவற்றின் தூதராகக் கருதப்படுகிறார். மக்களின் பாவங்களை நீக்கி நல்வழிப்படுத்தவே அவர் இந்த உலகில் பிறந்தார் என்பது நம்பிக்கை.

கிறிஸ்மஸ் மரம் – வீடுகள் மற்றும் தேவாலயங்களில் வண்ண விளக்குகள் மற்றும் பரிசுப் பொருள்களால் அலங்கரிக்கப்பட்ட கிறிஸ்மஸ் மரம் வைக்கப்படும்.

குடில் அமைத்தல் – இயேசுவின் பிறப்பை நினைவுபடுத்தும் வகையில் மாட்டுத் தொழுவம் போன்ற குடில்கள் அமைக்கப்படும்.

கரோல் கீதங்கள் – இயேசுவின் பிறப்பைப் போற்றும் பாடல்களைப் பாடி மக்கள் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்வார்கள்.

சாண்டா கிளாஸ் – குழந்தைகளைக் கவரும் விதமாக, சிவப்பு நிற உடை அணிந்த சாண்டா கிளாஸ் தாத்தா வந்து பரிசுகளை வழங்குவார் என்பது ஒரு இனிமையான நம்பிக்கை.

விருந்து – கேக், இனிப்புகள் மற்றும் அறுசுவை உணவுகள் தயார் செய்து உறவினர்களுடனும் நண்பர்களுடனும் பகிர்ந்து உண்பார்கள்.

இந்தப் பண்டிகை சாதி, மத பேதமின்றி அனைவரையும் ஒன்றிணைக்கும் ஒரு விழாவாகும். ஏழை எளியவர்களுக்கு உதவுவதும், பிறர் மீது அன்பு செலுத்துவதுமே இந்தப் பண்டிகையின் முக்கிய நோக்கமாகும்.

கிறிஸ்மஸ் என்பது வெறும் கொண்டாட்டம் மட்டுமல்ல. அது ஒருவருக்கொருவர் அன்பு, அமைதி மற்றும் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளும் ஒரு உன்னதமான தருணமாகும்.

இந்த விழா ஆண்டுக்கு ஒரு முறை தானே வருகிறது. இரண்டு, மூன்று முறை வரக் கூடாதா? என்ற ஏக்கம் எதிரொலிக்கும் பிரபலமான ஆங்கில வாசகம் ஒன்று இருக்கிறது. 'கிறிஸ்மஸ் கம்ஸ், பட் ஒன்ஸ் எ இயர்'. ஆமாம், கிறிஸ்துமஸ் பண்டிகை ஓர் ஆண்டில் ஒரு முறைதான் வருகிறது.

உலகெங்கும் உள்ள 240 கோடி கிறிஸ்தவர்கள் மட்டுமல்ல, மற்ற சமயங்களைச் சார்ந்த மக்களும் இணைந்து மகிழ்ந்து கொண்டாடும் பெருவிழா கிறிஸ்மஸ் என்றழைக்கப்படும் கிறிஸ்து பிறப்புப் பெருவிழா.

மேலை நாடுகளில் வாழா விட்டாலும் இந்த விழாக் காலத்தின்போது, அங்கிருந்தவர்களுக்கு இந்த விழாவைச் சார்ந்த கொண்டாட்டங்களும், அவை உருவாக்கும் களிப்பும் பேரானந்தமும் தெரிந்திருக்கும்.

கிறிஸ்துமஸ் விழாவின்போது குடும்பத்தினருக்கும் நெருங்கிய நண்பர்களுக்கும் பரிசு தரும் பழக்கம் இருக்கிறது.

இன்றைய சூழலில் மட்டுமல்ல புயல், வெள்ளம் போன்ற இயற்கைப் பேரிடர்கள் நிகழும்போதும், 'இந்த வேளையில் விழா அவசியமா?, கொண்டாட்டம் தேவையா?' என்று கேட்கும் சிலர் எப்போதும் இருப்பார்கள்.

கார்ல் ரானர், ரானல்ட் ரால் ஹைசர் போன்ற அறிஞர்கள் இக்கேள்விக்குத் தெளிவாக பதில் சொல்லியிருக்கிறார்கள். சோதனைகள் சூழும் வேளையில் வேதனையில், விரக்தியில் வீழ்ந்து கிடப்பதால் யாருக்கும் எந்தப் பயனும் இல்லை. சோகம் நம்மை முடக்கிப் போடும். சூழ்ந்திருக்கும் சவால்களைச் சந்திக்க நாம் முனைந்து எழ வேண்டும். அப்படி எழுவதற்கு நம்பிக்கையும் மகிழ்ச்சியும் அவசியம்.

நம் மனத்துக்கு வேண்டிய நம்பிக்கையையும் மகிழ்ச்சியையும் தருவதில் திருவிழாக்களுக்கு முக்கியப் பங்கு உள்ளது. நம்பிக்கையூட்டும் நல்ல நிகழ்வுகளை திருவிழாக்கள் நமக்கு நினைவூட்டுகின்றன. அந்த நிகழ்வுகள் நமக்குச் சொல்லும் அருஞ்செய்திகளை, அவை மீண்டும் முன்வைக்கின்றன.

மானிடத்தைக் கடவுள் இன்னும் கைவிட்டு விடவில்லை என்பதற்கான சான்றே பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் எனச் சொன்னார் மகாகவி தாகூர். அப்படியானால், பிறக்கும் இறைமகன் எதற்கான சான்று? அவரின் பிறப்பைக் கொண்டாடும் இவ்விழா சொல்லும் செய்தி என்ன? இறைவன் இவ்வுலகை எந்த அளவுக்கு அன்பு செய்கிறார் தெரியுமா? உலகை மீட்க தன் மகனை மனிதனாக அனுப்பும் அளவுக்கு. எனவே, கவலையும் கண்ணீரும் நிறைந்த இந்தச் சூழலில் நாம் இந்த விழாவைக் கொண்டாடியாக வேண்டும். கொண்டாட்ட விருந்துக்கு வழியில்லையே, பரிசுகள் வாங்கப் பணம் இல்லையே என்றெல்லாம் நாம் கவலைப்படத் தேவையில்லை.

பொருள்களோ, பரிசுகளோ இல்லாவிட்டால் என்ன? மனங்களும் கரங்களும் இணைந்திருக்கும்வரை கிறிஸ்துமஸ் என்ற அந்த மானுடகுமாரனின் பிறந்த நாள் அளித்த ஒளி நிலைத்திருக்கும். கருணையும் மனிதநேயமும் செழிக்கும் இடங்களில், மனங்களில் எல்லாம் கிறிஸ்துமஸ் விண்மீன் கண்சிமிட்டும். தெய்வக் குழந்தையின் திருமுகம் மலரும், ஒளிரும். 'நல்மனம் கொண்டோர் அனைவருக்கும் அமைதி' என்று வாழ்த்தும் வானவரின் பாடல் ஒலிக்கும்.

சூழ்ந்திருக்கும் சிரமங்களுக்கு மத்தியிலும் நாம் கொண்டாட வேண்டும். இதுதான் இன்றைய தேவை. எளியோருக்கு உதவி, எளிமையாய்க் கொண்டாட வேண்டும்.

துயரங்களிலிருந்தும் உற்பாதங்களிலிருந்தும் நம்மைக் காத்தருளும் தேவகுமாரனின் பிறந்த நாள் நம்மில் மகிழ்ச்சியையும் நம்பிக்கையையும் பெருக்கட்டும்.

# நாமனைவரும் ஆடம்பரங்களை தவிர்த்துக் கொண்டு இயேசுவின் உடனிருப்பை உணர்ந்து கொள்வோம்!

## மன்னார் மறைமாவட்ட ஆயர் கிறிஸ்மஸ் செய்தி



**(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)**

இயேசு எங்களுடன் இருக்கிறார். இந்த துன்பகரமான சூழலிலும் நாங்கள் நம்பிக் கையை இழக்கக் கூடாது. நம் நடுவிலே நமக் காக பாடுபட்ட, நமக்காகப் பல துன்பங்களை அனுபவித்த, உயிர்த்த இயேசு ஆண்டவர் எங்களோடு இருக்கிறார்என மன்னார் மறை மாவட்ட ஆயர் பேரருட்தந்தை அந்தோனிப் பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகை தெரி வித்துள்ளார்.

கிறிஸ்து பிறப்பு விழாவையொட்டி அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கிறிஸ்துவில் பிரியமான சகோதர, சகோ தரிகளே! உங்கள் அனைவருக்கும் நத்தார் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த இக்கட்டான சூழ்நிலையில், எதிர்பாராத இயற்கை பேரழிவின் மத்தியில் உங்களுடைய துன்பத்துடன் இணைந்து எங்கள் இதயங்க ளும் துடிக்கின்றன.

இந்த நிலையை நாங்கள் கிறிஸ்து இயேசு வின் பிறப்புடன் ஒப்பிட்டு பார்க்கும் போது கிறிஸ்து துன்பகரமான சூழலிலே அவரும் பிறந்தார். இந்த உலகிலே நாங்கள் படுகின்ற கஷ்டங்கள்,– துன்பங்கள்,கவலைகள் எல்லாவற்றையும் இயேசு ஆண்டவர் அனுபவித்தவராகவே இருக்கிறார்.

ஆகவே இயேசு எங்களுடன் இருக்கிறார். இம்மானுவேல் நாங்கள் யேசுவோடு இருக்கி றோம் . இந்த துன்பகரமான சூழலிலும் நாங் கள் நம்பிக்கையை இழக்க கூடாது. நம் நடுவிலே நமக்காக பாடுபட்ட , நமக்காக பல துன்பங்களை அனுபவித்த, உயிர்த்த இயேசு ஆண்டவரும் எங்களோடு இருக்கிறார். இயேசு பிறப்பின் வரு கையை தான் நாங்கள் கொண்டாடு கிறோம்.

இயேசுஎங்களைஒருபோதும்கைவிடமாட்டார். நாங்கள் தனியாக இல்லை. இம்மானுவேல் நான் உங்களுடன் இருக்கிறேன். அதாவது கடவுள் நம்மோடு இருக்கின்றார். இந்த விசுவாசத் தோடும், அன்போடும், ஒற்றுமையோடும்,ஒரே மனப்பான்மையோடும், ஒருவருக்கு ஒருவர் உதவி செய்கின்ற நல் கலாசாரத்தையும் ஒருவர் ஒருவரை தாங்கிக்கொள்கின்ற நல்ல கலாசாரத்தையும் நாங்கள் இந்த நாற்களிலே கற்றுக் கொள்ளுவோம்.

இந்த நாட்களில் நாங்கள் ஆடம்பரங்களை தவிர்த்துக் கொண்டு, இயேசுவின் உடன் இருப்பை நாங்கள் உணர்ந்து கொண்டு, எங்க ளுடைய உடன் சகோதரர்களுடன் ஒன்றித் திருக்கும் இந்த வேளையிலே இயேசு உங்கள் ஒவ்வொருவருக்கும் அமைதியையும்,அருளை யும் அருள்வாராக.

நமக்கு எல்லாம் புதுப்பிக்கப்பட்ட ஒரு வாழ்வை இந்த நத்தார் பெருவிழா கொண்டு வருவதாக. நாங்கள் எல்லாவற்றிற்கு மேலாக வும் ஆண்டவருடைய இருப்பை உணர்ந்து கொண்டு நாங்கள் ஒருவர் ஒருவரோடு ஒற்றுமையாக சமாதானத்துடன் வாழவும், இயேசுவின் பிறப்பு ஊடாக வழி நடத்திச் செல்வார். உங்கள் அனைவருக்கும் நத்தார் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

# இருளான யுகத்தை விலக்கி நம்பிக்கையின் விளக்கால் உலகை ஒளிமயமாக்குவோம்!

## எதிர்க்கட்சித் தலைவர் கிறிஸ்மஸ் செய்தியில் தெரிவிப்பு



இருளான யுகத்தை விலக்கி நம்பிக்கையின் விளக்கால் உலகை ஒளிமயமாக்குவோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஷ விடுத்துள்ள கிறிஸ்மஸ் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையை கடுமையாக பாதித்த டித்வா புயலுக்குப் பின் நம் தேசம் எதிர்கொண்ட வலி மிகுந்த அனுபவங்களை நினைவில் கொண்டு 2026 நத்தார் பண்டிகையை நாம் எதிர்நோக்குகின்றோம். அந்தப் புயலின் காரணமாக நமது சொந்த நாட்டில் நமது சொந்த மக்களின் உயிர்கள், சொத்துக்கள், வாழ்வாதாரங்கள் மற்றும் நம்பிக்கைகள் போன்ற பலவற்றை இழந்தோம். அவை எல்லாவற்றையும் விட, தங்களது அனைத்தையும் இழந்த மக்களின் கண்ணீரும் வேதனையும் நமது இதயங்களில் பதிந்துள்ளன.

கடவுளின் மகனான இயேசு கிறிஸ்துவின் பிறப்பை மிகுந்த மகிழ்ச்சியுடன் கொண்டாடும் நத்தார் பண்டிகை என்பது அழிவுகளுக்கிடையே நம்பிக்கை பிறக்கும் காலமாக குறிப்பிடப்படலாம்.

தீமையை விலக்கி நன்மை ஆட்சி செய்யும் யுகத்தின் விடியலாகும். இருளான இரவுகளில் கூட ஒரு ஒளி பிறக்கிறது. அது நம்பிக்கையின் ஒளி. டித்வா புயலுக்குப் பின் நாம் அனுபவித்த, நாம் கண்ட இனம், மதம், மொழி வேறுபாடுகளின்றி உயர்ந்து கைகோர்த்த இலங்கையர்களின் ஒற்றுமை, பரஸ்பர ஒத்துழைப்பு மற்றும் மனிதாபிமான இதயத்தின் வழியாக நாம் ஒரு நாடாக மீண்டும் ஒருமுறை எழுந்து நிற்க வேண்டும். அந்த ஒற்றுமையை நமது வலிமையாக மாற்றிக் கொள்ள வேண்டும்.

இந்த சந்தர்ப்பத்தில் நமக்கு தேவையானது பிளவுகளை அடிப்படையாகக் கொண்ட அரசியல் அல்ல. மக்களின் வேதனைக்கு பதிலளிக்கும், நாட்டின் எதிர்காலத்தை கட்டியெழுப்பும், நீதியான மற்றும் கருணை நிறைந்த நாட்டை உருவாக்குவதாகும். எதிர்காலத்தில் நாம் ஒரு நாடாக பெரிய சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். எனவே இந்த அழிவிலிருந்து பாடங்களை கற்று, உதவியற்றவர்களை பாதுகாக்கும், பேரழிவுகளின் முன்னால் மக்களை தனிமைப்படுத்தாத அரசை உருவாக்குவது நம் அனைவரின் கூட்டுப் பொறுப்பாகும்.

2025 நத்தார் நமக்கு நினைவூட்டுவது, இழந்தவை மட்டுமல்ல, நம்மிடம் உள்ள இழக்காதவை, அதாவது, ஒருவருக்கொருவர் கருணை காட்டுதல், ஒன்றாக இருத்தல் மற்றும் நாளைய நாள் பற்றிய நம்பிக்கையின் விசுவாசம் ஆகும். அந்த விசுவாசத்துடன், இலங்கை மீண்டும் வலிமையான, நீதியான மற்றும் மனிதாபிமான தேசமாக எழுந்து நிற்க முடியும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

எனவே இந்த நத்தார் பண்டிகை உலகம் முழுவதும் உள்ள இலங்கை கிறிஸ்தவ பக்தர்களுக்கும் அனைத்து குடிமக்களுக்கும் அமைதி, செழிப்பு, நல்லிணக்கம், ஒற்றுமை மற்றும் புதிய நம்பிக்கை நிறைந்த நத்தார் பண்டிகையாக அமைய வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

உங்கள் அனைவருக்கும் இனிய நத்தார் வாழ்த்துக்கள்.- என்றுள்ளது.

# பட்டாசுகள் வெடிப்பதைத் தவிர்த்துவிட்டு நத்தார் பண்டிகையைக் கொண்டாடுங்கள்!

## வடக்கு மாகாண ஆளுநர் கிறிஸ்மஸ் செய்தியில் கோரிக்கை




இந்த கிறிஸ்மஸ் தினத்தில் பட்டாசுகள் வெடிப்பதைத் தவிர்த்துவிடுங்கள். பட்டாசுகளின் சத்தத்தையும் புகையையும் தவிர்த்து, அமைதியாகவும் சூழலுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையிலும் பண்டிகையைக் கொண்டாடுவோம்.

இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் விடுத்துள்ள நத்தார் தின வாழ்த்துச் செய்தியில் கோரிக்கை விடுத்துள்ளார்.

உங்கள் அனைவருக்கும் எனது இதயம் கனிந்த கிறிஸ்மஸ் நத்தார் தின நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆளுநர் வெளியிட்டுள்ள நத்தார் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வழக்கமாகக் கிறிஸ்மஸ் என்றாலே குதூகலமும், கொண்டாட்டமும்தான் நம் நினைவுக்கு வரும். ஆனால், இம்முறை எமது நாடும், எமது மாகாணமும் பெரும் சோகத்தைச் சுமந்து நிற்கிறது. அண்மையில் நம்மைத் தாக்கிய 'டித்வா' புயல், நம் மண்ணில் ஏற்படுத்திய வடுக்கள் இன்னும் ஆறவில்லை. அந்தப் பேரிடரில் தங்கள் உயிர்களையும், உறவுகளையும், வாழ்நாள் சேமிப்பான உடமைகளையும் இழந்து தவிக்கும் நம் சொந்தங்களின் கண்ணீரை கவனிக்காது விடமுடியாது.

இயேசு பிரான் ஒரு எளிய குடிலில் பிறந்தவர். ஏழைகளின் துயரைத் துடைக்கவே அவர் அவதரித்தார். எனவே, இந்த ஆண்டு கிறிஸ்மஸ் பண்டிகையை ஆடம்பரமாகவும், வெகு விமரிசையாகவும் கொண்டாடுவதைத் தவிர்த்து விடுமாறு உங்கள் அனைவரையும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

விழாக்களுக்கான பணத்தை மிச்சப்படுத்தி, புயலால் பாதிக்கப்பட்டு நிர்க்கதியாய் நிற்கும் நம் சக உறவுகளுக்கு ஒருவேளை உணவாகவோ, உடையாகவோ அல்லது அவர்கள் வாழ்வை மீட்டெடுக்கும் உதவியாகவோ வழங்குவதே நாம் இறைவனுக்குச் செய்யும் உண்மையான தொண்டாக அமையும்.

அதேபோல, மற்றுமொரு முக்கியமான விடயத்தையும் உங்கள் கவனத்துக்குக் கொண்டு வருகிறேன். தற்போது வடக்கு மாகாணத்தில் காற்றின் மாசின் தரம் வழமையை விடச் சற்று அதிகமாகவும், ஆபத்தான நிலையிலும் உள்ளதாகத் தரவுகள் கூறுகின்றன.

எனவே, தயவுசெய்து இந்த கிறிஸ்மஸ் தினத்தில் பட்டாசுகள் வெடிப்பதைத் தவிர்த்து விடுங்கள். பட்டாசுகளின் சத்தத்தையும் புகையையும் தவிர்த்து, அமைதியாகவும் சூழலுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையிலும் பண்டிகையைக் கொண்டாடுவோம்.

புயல் காற்றால் சாய்ந்த மரங்களை விட, நம் நம்பிக்கை வேர்கள் ஆழமானவை. இருள் சூழ்ந்த இந்த நேரத்தில், கிறிஸ்மஸ் ஒளி நம் அனைவரின் வாழ்விலும் நம்பிக்கையையும், ஆறுதலையும் தரட்டும். சாதி, மத பேதங்களைக் கடந்து, ஒரு தாய்ப் பிள்ளைகளாய் ஒன்றிணைந்து, பாதிக்கப்பட்டவர்களை அரவணைத்து இக்கட்டான சூழலை வெல்வோம்.

அனைவருக்கும் அமைதி தவழும் கிறிஸ்மஸ் வாழ்த்துக்கள்.– என்றுள்ளது.

# துன்பங்கள் நீங்கி தூய ஆண்டு மலரட்டும்!

## இ.தொ.கா. தவிசாளரின் கிறிஸ்மஸ் வாழ்த்துச் செய்தி



நாடு சுபிட்சமான ஏதிர்காலத்தை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கும் நேரத்தில் இந்த ஆண்டின் இறுதிப் பகுதியில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தம் சொல்லொணா துயரத்துக்கு எம்மை இட்டுச் சென்றுள்ளது.

இந்த நிலையில் அனைத்து துயரங்களும் நீங்கி மகிழ்ச்சி பொங்க மக்ளுக்கு கிறிஸ்மஸ், புத்தாண்டு வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன் என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தவிசாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஸ்வரன் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அந்த வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அண்மையில் இயற்கை அனர்த்தம் ஏற்பட்டபோது நாட்டின் பல பகுதிகளிலும் மக்கள் பாதிப்பை எதிர்நோக்கியிருந்தார்கள். குறிப்பாக மலையக மக்கள் பல பிரதேசங்களில் வீடு வாசல், சொத்து சுகங்களை இழந்து சிரமங்களை மேற்கொண்டிருந்தார்கள். மாணவர்களின் கல்வியும் பாதிக்கப்பட்டிருந்தது. அவர்களுக்கான நிவாரணங்களை முடிந்தளவு வழங்கியிருந்தோம். எமது மக்களுக்கு காணி, வீட்டு உரிமைகளைப் பெற்றுக் கொடுக்க அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளதோடு, இந்திய அரசாங்கத்தின் வீடமைப்புத் திட்டத்தை துரிதமாக மேற்கொள்ளவும் வலியுறுத்தி வருகிறோம்.

மக்கள் வாழ்வு இயல்பு நிலைக்குத் திரும்பவும், கிறிஸ்மஸ் பண்டிகையைக் கொண்டாடும் மக்களுக்கு உலக இரட்சகர் யேசு பிரானின் பேரருள் கிட்டவும் மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவிப்பதோடு, மலரும் புத்தாண்டு அனைவருக்கும் மகிழ்ச்சியை ஏற்படுத்தும் ஆண்டாக மலர வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.– என்றுள்ளது.




# 15 மாடுகள் பதிவு அனுமதியின்றி இறைச்சியாக்க வைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்றிரவில் மீட்பு

## யாழ். பண்ணைப் பகுதியில் உள்ள கொல்களத்தில் சம்பவம்

யாழ் மாநகர சபையின் ஆளுகைக் குட்பட்ட பண்ணை பகுதியில் உள்ள கொல்களத்தில் பதிவு அனுமதியின்றி இறைச்சியாக்க தடுத்து வைக்கப்பட்டிருந்த கன்று குட்டிகள் உள்ளிட்ட 15 மாடுகள் கைப்பற்றப்பட்டன.

யாழ் மாநகர சுகாதார குழுத் தலைவர் சாருஜன், மாநகர பிரதி முதல்வர் இமானுவேல் தயாளன், மாநகர சபை உறுப்பினர் சு.நிஷாந்தன், மயூரன் உள்ளிட்ட மாநகர சபை குழுவினரால் இந்தக் கொல்களம் நேற்று இரவு முற்றுகையிடப்பட்டது.

நாளைய நத்தார் தினத்தை முன்னிட்டு அனுமதியற்ற முறையில் காது பட்டி இன்றி இந்த மாடுகள் கொண்டு வரப்பட்டு இறைச்சியாக்க வெட்ட தயார் நிலையில் வைக்கப்பட்ட நிலையில் மாநகர சபை மேற்பார்வை உத்தியோகத்தருக்கு கிடைத்த தகவலுக்கமைய சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

இந்த மாடுகள் வெட்டப்படுவது தடுக்கப்பட்டதுடன் உரிமையாளருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.



# புல்மோட்டை கனியவளத்தின் ஊழியர்கள் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டத்தில்!

(ஏ.எச்.ஹஸ்பர்)

திருகோணமலை புல்மோட்டை கனியவள கூட்டுத்தாபன ஊழியர்கள் நேற்றுப் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இப்பகிஷ்கரிப்பில் 300 க்கும் மேற்பட்ட ஊழியர்கள் பங்குபற்றினர். வருட இறுதியில் ஊழியர்களுக்கு கிடைக்க இருந்த பல கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டதன் காரணமாகத் தாங்கள் இந்த வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர் என ஊழியர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

நேற்று மாலைக்குள் ஊழியர்களுக்கு சாதகமான பதில் கிடைக்காவிடின் வேலை நிறுத்த போராட்டத்தை தொடரப்போகின்றார்கள் என அவர்கள் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில் எதிர்வரும் திங்கட்கிழமைக்குள் தீர்வு தர்ப்படும் என அறிவிக்கப்பட்டமையை அடுத்து, தற்காலிகமாகத் தாங்கள் போராட்டத்தைக் கைவிட்டுள்ளனர் எனவும், நேற்றைய தினம் கனிய மணலை ஏற்றுவதற்கு இடமளிக்கப்படவில்லை எனவும் இதன் போது ஊழியர்கள் தெரிவித்தனர்.




# வவுனியாவில் கஞ்சாச் செடி வளர்த்தவர் கைது!

(கி.வசந்தன்)

வவுனியா மடுக்கந்த பகுதியில் காணி ஒன்றில் கஞ்சா செடி ஒன்றை பயிரிட்டு வளர்த்த ஒருவரைத் தாங்கள் கைது செய்துள்ளனர் என வவுனியா தலைமை பொலிஸ் நிலைய போதைத் தடுப்பு பிரிவு பொலிஸார் தெரிவித்த னர்.

வவுனியா பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து மடுகந்த பகுதியில் வவுனியா தலைமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரகீத் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின் போதே கஞ்சா செடி வளர்த்தமை கண்டு பிடிக் கப்பட்டது. இதில் மடுகந்த பகுதியைச் சேர்ந்த 32 வயதான ஒருவர் கைது செய்யப்பட்டமையுடன் கஞ்சா செடியும் கைப்பற்றப்பட்டது.



மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை நீதிமன்றில் முற்படுத்தத் தாங்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர் எனவும் பொலிஸார் மேலும் தெரி வித்தனர்.



# வவுனியாவில் கொட்டும் மழையிலும் களைகட்டிய நத்தார் கால வியாபாரம்

(கி.வசந்தன்)

வவுனியாவில் கொட்டும் மழையிலும் நத்தார் பண்டிகை வியாபாரம் களை கட்டியுள்ளது.

உலகம் முழுவதும் இயேசுவின் பிறந்தநாளை கிறிஸ்தவ மக்கள் நத் தார் பண்டிகையாக இன்று கொண்டாடு கின்றனர்.

அந்த வகையில் வவுனியாவிலும் நத்தார் பண்டிகையை கொண்டாடுவ தற்காக மக்கள் புத்தாடைகள் மற்றும் பட்டாசுகள், கிறிஸ்மஸ் மரங் களையும் வேண்டிச் செல்கின்ற மையை அவதானிக்க கூடியதாக இருந்தது.







# வவுனியாவில் வீதியோர வியாபாரங்களை கட்டுப்படுத்த மாநகர சபை நடவடிக்கை





(கி.வசந்தன்)

வவுனியாவில் வீதியோர வியாபார நடவடிக்கைகளை அகற்றும் செயற்பாட்டை வவுனியா மாநகரசபை நேற்று முன்னெடுத்தது.

நத்தார் பண்டிகை மற்றும் புத்தாண்டு வியாபாரம் வவுனியாவில் களைகட்டியுள்ள நிலையில் வர்த்தக நிலையங்களிற்கு முன்பாக நடைபாதையை தடை செய்யும் முகமாக கொட்டகை அமைத்து வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அத்துடன், வீதியோரங்களிலும் பொது மக்களிற்கு இடையூறு ஏற்படும் வகையில் அங்காடி வியாபார நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதன் காரணமாக பொதுமக்கள் பெரும் சிரமத்திற்குள்ளாகி வருகின்றமையுடன், விபத்துக்களும் ஏற்படும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது.

இதனைக் கருத்தில் கொண்டு மாநகர சபையினரால் நடைபாதை மற்றும் வீதியோரங்களை ஆக்கிரமித்து வியாபார நடவடிக்கைகள் மேற்கொண்டு வரும் கொட்டகைகள் மற்றும் பொருள்களை அகற்றும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது. மாநகர ஆணையாளரின் உத்தரவுக்கமைய வருமானவரி பரிசோதகர்கள், பொதுசுகாதார பரிசோதகர்கள் உட்பட உத்தியோகத்தர்கள் இச் செயற்பாட்டை முன்னெடுத்திருந்தனர்.



# நிவாரணக் கொடுப்பனவுகளில் பாரபட்சம்: சூடுவெந்தபுலவு கிராமத்தில் கவனவீர்ப்பு!

(வவுனியா நிருபர்)

வெள்ள நிவாரணக் கொடுப்பனவில் பாரபட்சம் காட்டப்பட்டுள்ளதாகத் தெரிவித்து வவுனியா, சூடுவெந்தபுலவு கிராம மக்கள் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

வவுனியா, சூடுவெந்தபுலவு கிராம அலுவலர் அலுவலகம் முன்பாக இந்தக் கவனயீர்ப்பு போராட்டம் நேற்று மாலை முன்னெடுக்கப்பட்டது.

வெள்ள அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்ட 25,000 ரூபா கொடுப்பனவு பாதிக்கப்படாதவர்களுக்கு வழங்கப்பட்டதாகவும், பாதிக்கப்பட்ட பலருக்கு அந்தக் கொடுப்பனவு வழங்கப்படவில்லை எனவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

இதன் போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கிராம சேவையாளர், அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுத்தி உத்தியோகத்தர்களுக்கு எதிராக பதாதைகளை தாங்கி இருந்தமையோடு கோசங்களையும் எழுப்பி இருந்தனர்.

அத்துடன், ஊழலை ஒழிப்பதாக கூறிய அரசாங்கத்திற்கு நாம் வாக்களித்தோம். முன்னைய காலங்களைப் போல் அல்லாமல் பாரபட்சமற்ற முறையில் இந்த நிவாரணங்களை வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை முன் வைத்திருந்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் சுமார் 50 பேர் வரையில் கலந்து கொண்டிருந்தனர்.









# போஷணை குறைபாட்டுக்கு முகங்கொடுக்கும் சிறுவர்களுக்கு யுனிசெப் போஷணை பதார்த்தம்

டித்வா சூறாவளியை அடுத்து ஏற்பட்ட பேரனர்த்தத்தினால் போஷணை குறைபாட்டுக்கு முகங்கொடுத்திருக்கும் சிறுவர்களுக்கு உதவும் நோக்கில் 20 ஆயிரம் கிலோ கிராம் பீ-5 எனும் போஷணை பதார்த்தம் யுனிசெப் அமைப்பினால் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது.

டித்வா சூறாவளி காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு அனர்த்தங்களில் சிக்கிப் நூற்றுக்கணக் கானோர் பலியாகியிருப்பதுடன், லட்சக்கணக்கானோர் தமது இருப்பிடங் களையும் வாழ்வாதாரத்தையும் இழந்து வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், போதியளவு போஷணை பதார்த்தங்கள் அடங்கிய உணவுப் பொருள்கள் கிடைக்காமையினால் சிறுவர்கள் மத்தியில் மந்தபோஷணை நிலை அதிகரிக்கக்கூடிய வாய்ப்பு உள்ளதாக சுகாதாரத்துறை நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

இந்த நிலையிலேயே, 6 மாதக் குழந்தைகள் முதல் 5 வயது வரையான சிறுவர்கள் மந்தபோஷணையினால் பாதிக்கப் படுவதைத் தடுப்பதற்கு அவசியமான 25 ஆயிரம் கிலோகிராம் பீ-5 எனும் போசணை பதார்த்தம் கொழும்பிலுள்ள யுனிசெப் அலுவலக அதிகாரிகளால், சுகாதாரத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.





# வடமராட்சி ஊடக இல்லத்தின் ஏற்பாட்டில் மூதூரில் நிவாரண பொதி வழங்கிவைப்பு













திருகோணமலை, மூதூர் – பள்ளிக் குடியிருப்பு கிராமத்தில் டித்வா புயலினால் கடுமையாக பாதிக்கப்பட்ட கர்ப்பவதி களுக்கான சத்துணவுப் பொருள்கள் அடங்கிய நிவாரணப் பொதிகள், யாழ். வடமராட்சி ஊடக் இல்லத்தின் ஏற்பாட்டில் புலம்பெயர் வாழ் ஈழத்தமிழ் உறவுகளின் நிதிப்பங்களிப்புடன் வழங்கி வைக் கப்பட்டன.

டித்வா புயல் காரணமாக ஏற்பட்டிருந்த சீரற்ற காலநிலையினால் மாவிலாறு குளக்கட்டு உடைப்பெடுத்து ஏற்பட்ட வெள்ளத்தினால் திருகோணமலை – மூதூர் , பள்ளிக்குடியிருப்பு கிராமம் மிகக் கடுமையான பாதிப்பை சந்தித்திருந்தது.

இந்நிலையில், பள்ளிக்குடியிருப்பில் செயற்பட்டு வரும் வி.கே. கல்வி நிலையத்தை சேர்ந்த சுகதாஸினால் விடுக்கப் பட்ட கோரிக்கைக்கு அமைவாக அக்கிராமத்தில் வாழும் 19 கர்ப்பவதிகளுக்குத் தேவையான சத்துணவுப் பொருள்கள் இவ்வாறு நேற்று முன்தினம் நேரில் வழங்கி வைக்கப்பட்டன.

வல்வெட்டித்துறையை சேர்ந்த கனடா வாழ் கு.திருமுருகன் மற்றும் அவுஸ் திரேலியா வாழ் விஜித்தா ஆகியோரது நிதிப்பங்களிப்பில் சத்துணவு பொருள் கள், நுளம்பு கூடை உள்ளிட்ட அத்தி யாவசிய பொருள்கள் அடங்கிய தலா 4000 ரூபா பெறுமதியான பொதிகள் வழங்கிவைக்கப்பட்டன.

யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தின் சார்பில் அதன் முக்கிய செயற்பாட் டாளரும், மூத்த ஊடகவியலாளருமான மு.மதிவாணன் நேரில் சென்று உதவிப் பொருள்களை வழங்கி வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# யாழ். புனித மரியன்னை பேராலயதில் நேற்று நள்ளிரவு கிறிஸ்மஸ் ஆராதனை














# நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரிலிருந்து துப்பாக்கி மீட்பு

## விசாரணைக்கு 5 குழுக்கள்

ராகம – குருகுலாவ பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரை சோதனையிட்ட போது ரி -56 ரக துப்பாக்கி, 02 மெகஸின்கள் ஆகியன கைப்பற்றப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்காக 05 குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த காரில் போலி இலக்கத்தகடு பொருத்தப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

குருகுலாவத்த, பஹலவத்த பகுதியில் இந்த கார் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டமை தொடர்பில் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலுக்கமைய நேற்று முன்தினம் இரவு சோதனைக்குட்படுத்தப்பட்டது.

சந்தேகநபர்கள் காரை கைவிட்டுச் சென்றுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

காரில் 11 கைவிரல் அடையாளங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என பொலிஸார் குறிப்பிட்டனர்.





# கண்டி மாவட்டத்தில் ஏற்பட்ட அனர்த்தத்தால் 241 பேர் பலி

கண்டி மாவட்டத்தில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்களினால் 32 சிறுவர்கள் தங்களது தந்தையையும், 07 சிறுவர்கள் தங்களது தாயையும் இழந்துள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் மாவட்ட உதவிப் பணிப்பாளர் இந்திக ரணவீர தெரிவித்துள்ளார்.

குறிப்பாக, மூன்று சிறுவர்கள் தங்களது தாய் மற்றும் தந்தை ஆகிய இருவரையும் இழந்துள்ளனர் என அவர் மிகவும் கவலையுடன் சுட்டிக்காட்டியுள்ளார்.

கண்டி மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அனர்த்த முகாமைத்துவ குழுக் கூட்டத்திலேயே இந்தத் தகவல்கள் வெளியிடப்பட்டன.

இந்த அனர்த்தங்கள் காரணமாக 323 கர்ப்பிணித் தாய்மார்களும், ஐந்து வயதிற்குட்பட்ட 1,791 குழந்தைகளும் பல்வேறு பாதிப்புகளுக்கு உள்ளாகியுள்ளனர்.

டித்வா சூறாவளி ஏற்படுத்திய அழிவுகளினால் கண்டி மாவட்டத்தில் இதுவரையில் 241 பேர் உயிரிழந்துள்ளதோடு, 68 பேர் காணாமல் போயுள்ளனர்.

மேலும், 114 பேர் காயமடைந்துள்ளதாகவும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அனர்த்தத்தின் தாக்கத்தினால் கண்டி மாவட்டத்தில் 1,959 வீடுகள் முழுமையாகவும், 16,565 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

ஒட்டுமொத்தமாக 55,804 குடும்பங்களைச் சேர்ந்த 180,335 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 23,244 குடும்பங்கள் தங்களது உறவினர்களின் வீடுகளில் தங்கியுள்ளதுடன், 2,089 குடும்பங்கள் மாவட்டத்தில் உள்ள 95 பாதுகாப்பு மையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

அரசாங்கத்தினால் வீடுகளைச் சுத்தம் செய்வதற்காக வழங்கப்படுகின்ற 25,000 ரூபாய் கொடுப்பனவு வழங்கும் பணிகள் தற்போது இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளதாகக் கண்டி மேலதிக மாவட்ட செயலாளர் நிலூகா புலத்கே தெரிவித்துள்ளார்.

அத்துடன், பாதிக்கப்பட்ட அனைத்துக் குடும்பங்களுக்கும் மாவட்ட செயலகத்தின் ஊடாக உலர் உணவுப் பொருட்களை விநியோகிக்கத் தேவையான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மகாராஷ்டிர மாநகராட்சி தேர்தலில் காங்கிரஸ் கட்சி தனித்துப் போட்டி

மகாராஷ்டிராவில் உத்தவ் தாக்கரே – ராஜ் தாக்கரே சகோதரர்களுக்கு இடையேயான கூட்டணியை வரவேற்பதாகக் கூறிய மூத்த காங்கிரஸ் தலைவர் விஜய் வடெட்டிவர், மாநகராட்சித் தேர்தலில் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடும் எனத் தெரிவித்துள்ளார்.

நாக்பூரில் இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய விஜய் வடெட்டிவர்,

“ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ஒன்றுபட்டுத் தேர்தலில் போட்டியிடும் போது, நாங்கள் வருத்தப்பட எந்தக் காரணமும் இல்லை. நாங்கள் அவர்களை வாழ்த்துகிறோம், அவர்கள் வெற்றி பெற விரும்புகிறோம்.

ஆனால், காங்கிரஸ் கட்சி ஒரு போதும் எம்என்எஸ் கட்சியுடன் கூட்டணி வைக்க விரும்பியதில்லை. நேற்றுவரை சிவசேனா மற்றும் சரத் பவாருடன் நிற்பதுதான் எங்கள் நிலைப்பாடாக இருந்தது, இன்றும் அதுவே தொடர்



கிறது.

சமீபத்திய நகராட்சி மன்றத் தேர்தல்களில் காங்கிரஸ் கட்சி தனித்துப் போட்டியிட்டு மிகப் பெரிய ஒற்றைக் கட்சியாக உருவெடுத்துள்ளது. உள்ளாட்சித் தேர்தலில் கூட்டணி அமைக்காதபோதிலும், வாக்கு சதவீதம், கவுன்சிலர் இடங்கள் மற்றும் மேயர் பதவிகளின் அடிப்படையில் காங்கிரஸ் கட்சி தனது கூட்டணிக் கட்சிகளை விட சிறப்பாகச் செயல்பட்டுள்ளது. உள்ளாட்சித் தேர்தலில் தங்கள் சொந்த பலத்தில் போட்டியிடுவதில் நம்பிக்கை கொண்ட காங்கிரஸ் தொண்டர்களின் மனநிலையை இது தெளிவாகக் காட்டுகிறது.

மக்களவைத் தேர்தல் அல்லது சட்டப்பேரவை தேர்தல்களுக்கான கூட்டணிகளை உள்ளாட்சித் தேர்தல்களுடன் தொடர்புபடுத்துவது பொருத்தமற்றது. உள்ளாட்சித் தேர்தல்கள் உள்ளூர் தொண்டர்கள் மற்றும் உள்ளூர் சமன்பாடுகளைச் சார்ந்தது. எனவே எங்கள் மகா விகாஸ் அகாதி கூட்டணி முறிவதற்கு வாய்ப்பே இல்லை. சிவசேனா (யு.பி.டி) கட்சி இண்டியா கூட்டணியின் ஒரு பகுதியாகத் தொடர்கிறது.

மாநகராட்சித் தேர்தலில் காங்கிரஸும் வஞ்சித் பகுஜன் அகாதியும் (வி.பி.ஏ) இணைந்து போட்டியிட ஒப்புக் கொண்டுள்ளது. வஞ்சித் பகுஜன் அகாதியுடன் மாநிலம் முழுவதும் இடப்பகிர்வு குறித்து பேச்சுவார்த்தை நடந்து வருகிறது.” என்று தெரிவித்துள்ளார்.

# டில்லி காற்று மாசு காரணமாக அமைச்சருக்கு நோய் தொற்று

காற்று மாசுபாடு காரணமாக டில்லியில் மூன்று நாள்கள் மட்டுமே தங்கியிருந்தாலும் எனக்கு நோய்த் தொற்று ஏற்படுகிறது என்று மத்திய போக்குவரத்துத் துறை அமைச்சர் நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

டில்லியில் மூத்த பத்திரிகையாளரும், முன்னாள் மத்திய தகவல் ஆணையருமான உதய் மஹூர்கரின் புத்தக வெளியீட்டு விழாவில் பேசிய மத்திய போக்குவரத்துத் துறை அமைச்சர் நிதின் கட்கரி,

“இன்று உண்மையான தேசபக்தி என்று ஒன்று இருக்குமானால், அது இறக்குமதியைக் குறைத்து ஏற்றுமதியை அதிகரிப்பதில்தான் உள்ளது. நான் டெல்லியில் இரண்டு நாள்கள் மட்டுமே




தங்குகிறேன். அதற்கே எனக்கு நோய்த் தொற்றுகள் வந்துவிடுகின்றன. டில்லி ஏன் மாசுபாட்டால் இவ்வளவு அவதிப்படுகிறது?

நான்தான் போக்குவரத்துத் துறை அமைச்சர். ஆனால், டில்லி மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஏற்படும் மாசுபாட்டுக்கு போக்குவரத்துதான் 40 சதவீதம் காரணமாக உள்ளது.

நாம் புதைபடிவ எரிபொருள்களை இறக்குமதி செய்ய 22 லட்சம் கோடி இந்திய ரூபா செலவிடுகிறோம். இது என்ன வகையான தேசபக்தி? இவ்வளவு பணத்தைச் செலவழித்து, நாம் நம் சொந்த நாட்டையே மாசுபடுத்தி வருகிறோம். மாற்று எரிபொருள்கள் மற்றும் உயிரி எரிபொருட்களில் நம்மால் தற்சார்பு அடைய முடியாதா?

புதைபடிவ எரிபொருள்கள் நம்மிடம் குறைவாகவே உள்ளன, மாசுபாடும் அதிகரித்து வருகிறது. நம்மால் புதைபடிவ எரிபொருள் பயன்பாட்டைக் குறைக்க முடியாதா? பூஜ்ஜிய மாசுபாட்டுக்கு வழிவகுக்கும் மின்சார வாகனங்களையும் ஹைட்ரஜன் எரிபொருள் வாகனங்களையும் நம்மால் ஏன் ஊக்குவிக்க முடியாது?” என்றார்.

# டில்லியில் காற்று மாசுபாடு அதிகரிப்பு குறித்து மத்திய அரசுக்கு மேல் நீதிமன்றம் எச்சரிக்கை

டில்லியில் காற்று மாசுபாடு அதிகரித்து வருவது குறித்து மத்திய அரசுக்கு டில்லி மேல் நீதிமன்றம் நேற்று கடுமையான எச்சரிக்கை விடுத்துள்ளது.

அந்த உத்தரவில், குடிமக்களுக்கு சுத்தமான காற்று கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும் அல்லது காற்று சுத்திகரிப்பான்கள் மீதான ஜி.எஸ்.டி. வரியை உடனடியாகக் குறைக்க வேண்டும் என்று நீதிமன்றம் அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டது.

பொது சுகாதார அவசரநிலைக்கு மத்தியில் தேவைப்படும் குறைந்தபட்ச நடவடிக்கையாக ஜி.எஸ்.டி. அமைப்பின் கீழ் 18 வீத வரியைக் குறைப்பது மினவும் பயனுள்ளதாக இருக்கும் என்று தலைமை நீதிபதி டி.கே. உபாத்யாயா மற்றும் நீதிபதி துஷார் ராவ் கெடேலா ஆகியோர் அடங்கிய அமர்வு கூறியது.

காற்று சுத்திகரிப்பான்களை ‘மருத்துவ சாதனங்கள்’ என வகைப்படுத்தி அவற்றின் ஜி.எஸ்.டி. வரியை 5 வீதமாக



குறைக்க வேண்டும் என்று நீதிமன்றத்தை வலியுறுத்தி சட்டத்தரணி கபில் மதன் தாக்கல் செய்த மனு மீதான விசாரணையைத் தொடர்ந்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

டில்லி மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் காற்று மாசுபாடு தொடர்ந்து ஆபத்தான அளவை எட்டியுள்ளது.

நேற்று அதிகாலை காற்று மாசுபாடு அளவீடுகள் நொய்டாவில் 355 ஆகவும், டில்லியில் 349 ஆகவும், குருகிராமில் 316 ஆகவும் மற்றும் காஜியாபாத்தில் 309 ஆகவும் இருந்தன.




# புளூபேர்ட் பிளாக் 2 செயற்கைக்கோளை விண்ணில் ஏவியாது இஸ்ரோ நிறுவனம்

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான இஸ்ரோ உள்நாடு வெளிநாடுகளின் செயற்கைக்கோள்களை விண்ணில் ஏவி வருகிறது.

அந்த வகையில் அமெரிக்காவின் ஏ.எஸ்.டி. தொலை தொடர்பு நிறுவனத்திற்கு சொந்தமான தகவல் தொடர்பு சேவைக்கான புளூபேர்ட் பிளாக் - 2 செயற்கைக்கோளை இஸ்ரோ நேற்று வெற்றிகரமாக விண்ணில் ஏவியுள்ளது.

விண்வெளியில் இருந்து நேரடியாக ஸ்மார்ட் போன்களுக்கே அதிவேக இணைய சேவையை வழங்குவதுதான் இந்த செயற்கைக்கோளின் பிரதான நோக்கமாகும்.

இதன் மூலம் தொலைத்தொடர்பு கோபுரங்கள் இல்லாத அடர்ந்த காடுகள், மலைப்பகுதிகளிலும் 5ஜி வேகத்தில் இணையம், வீடியோ அழைப்புகள் மற்றும் குறுஞ்செய்தி சேவைகளை பெற முடியும்.

புளூபேர்ட் பிளாக் - 2 செயற்கைக்கோள் 6,100 கிலோ எடை கொண்டதாகும்.

இந்த செயற்கைக்கோள் பாகுபலி ராக்கெட்டான எல்.வி.எம்.3- எம்.6 மூலம் விண்ணில் ஏவப்பட்டது.

ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மையத்தில் உள்ள 2 ஆவது ஏவுதளத்தில் இருந்து காலை 8.55 மணிக்கு பாகுபலி ரொக்கெட் மூலம் செயற்கைக்கோள் விண்ணில் ஏவப்பட்டது.

இதன் மூலம் 6,100 கிலோ எடை கொண்ட செயற்கைக்கோளை முதன் முதலாக வெற்றிகரமாக விண்ணில் ஏவி இஸ்ரோ சாதனை படைத்துள்ளது.

இதுபோன்ற அதிக எடைகொண்ட செயற்கைக்கோள்களை அமெரிக்கா உள்பட பல்வேறு நாடுகள் முன்னதாக பிரெஞ்சு கயானாவில் இருந்து ஏவின.

தற்போது, இவ்வளவு எடைகொண்ட செயற்கைக்கோளை முதல் முறையாக இஸ்ரோ ஏவியுள்ளது.





# மொஸ்கோவில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் மூவர் பலி

ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் பொலிஸ் அதிகாரி இருவர் உள்ளிட்ட 3 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

ரஷ்யாவின் மொஸ்கோ தெற்குப்பகுதியில் யெலெட்ஸ்கயா என்ற தெருவில் சந்தேகத்திற்கிடமான வகையில் நின்று கொண்டிருந்த ஒருவரிடம், அவ்வழியே ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த இரண்டு பொலிஸ் அதிகாரிகள் விசாரணை நடத்தினர்.

இந்த விசாரணையின் போது திடீரென் பலத்த சத்தத்துடன் குண்டுவெடித்ததோடு, இந்த சம்பவத்தில் இரு பொலிஸ் அதிகாரிகளும் பலத்த காயமடைந்து பின்னர் உயிரிழந்தனர். அங்கிருந்த ஒருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த சம்பவத்தையடுத்து பொலிஸ் அதிகாரிகளைக் கொலை செய்ய முயன்றமை மற்றும் சட்ட விரோத வெடிபொருள்கள் கடத்தல் ஆகிய பிரிவுகளின் கீழ் ரஷ்யாவின் புலனாய்வுக் குழு வழக்குப் பதிவு செய்துள்ளது.

# 3000 ஆப்கானிஸ்தான் அகதிகளை வெளியேற்றிய பாகிஸ்தான், ஈரான்

பாகிஸ்தான் மற்றும் ஈரான் ஆகிய நாடுகளில் இருந்து ஒரே நாளில் மூவாயிரத்துக்கும் அதிகமான ஆப்கானிஸ்தான் அகதிகளை வெளியேற்றப்பட்டனர் என தலிபான் அரசு தெரிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் கடந்த 2021 ஆம் ஆண்டு தலிபான்கள் தலைமையிலான ஆட்சி அமைந்ததை அடுத்து, அண்டை நாடுகளான பாகிஸ்தான், மற்றும் ஈரான் அரசுகள் ஆப்கானிஸ்தான் அகதிகளை வெளியேற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன.



இந்த நிலையில், ஈரான் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்து ஒரே நாளில் வெளியேற்றப்பட்ட சுமார் 693 குடும்பங்களைச் சேர்ந்த 3,610 ஆப்கானிஸ்தர்கள் ஆப்கானிஸ்தான் திரும்பியுள்ளனர் என கூறப்படுகிறது.

இதனை தலிபான் அரசின் செய்தித் தொடர்பாளர் முல்லா ஹம்துல்லா ஃபித்ராத் உறுதிப்படுத்தியுள்ளார்.

பாகிஸ்தான், ஈரான் நாடுகளிலிருந்து வெளியேற்றப்பட்ட ஆப்கானிஸ்தான் அகதிகள் டோர்காம், இஸ்லாம் காலா, புல்-இ-அப்ரேஷாம், ஸ்பின் போல்டாக் மற்றும் பஹ்ராம்சா ஆகிய எல்லைகள் வழியாக ஆப்கானிஸ்தான் வந்தடைந்தனர் என அவர் தெரிவித்துள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் - 25.12.2025




புத்திசாலித்தனத்தை சரியான நேரத்தில் பயன்படுத்துவதன் மூலம் இன்று சாதகமான பலன்கள் கிட்டும். உறுதி மற்றும் சிறப்பான திட்டம் மூலம் உங்கள் இலக்குகளை அடைவீர்கள்.

உங்கள் சிறப்பான செயல்திறன் மூலம் பணியில் வெற்றி பெறும் நிலை காணப்படும். உங்கள் பணியின் மூலம் கூடுதல் நற்பலன்கள் பெறுவீர்கள்.

நீங்கள் உங்கள் துணையிடம் நேர்மையாக நடந்து கொள்வீர்கள். சிறந்த தொடர்பு கொண்டிருப்பீர்கள். இதனால் அன்பும் மகிழ்ச்சியும் பெருகும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். சிறப்பாக சேமிக்க இயலும். புதிய முதலீடுகள் லாபகரமாக இருக்கும்.

மன உறுதி காரணமாக இன்று சிறந்த ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள். கடவுள் ஆசி இன்று உங்கள் பக்கம்.




உங்கள் மனோதிடம் மற்றும் உற்சாகம் காரணமாக இன்று சிறந்த பலன்கள் கிடைக்கும். இன்று அனைத்து விதத்திலும் சிறப்பான நாள்.

பணியிடத்தில் உங்கள் திறமைகளை வெளிபடுத்துவீர்கள். இதனால் உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும். நீங்கள் சிறப்பாக பணியாற்றுவீர்கள்.

உங்கள் துணையிடம் அமைதியான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று நல்ல பண வரவு காணப்படுகின்றது. உங்கள் கடின உழைப்பு காரணமாக ஊக்கத்தொகை அல்லது சலுகை வகையில் பண வரவு ஏற்படும்.

உங்களிடம் காணப்படும் மன திருப்தி மற்றும் மகிழ்ச்சி காரணமாக இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும்.




இன்று தேவையில்லாமல் வாக்குவாதத்தில் ஈடுபடுவீர்கள். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். அமைதியாக இருப்பது நல்லது.

அதிகப் பணிகள் காணப்படும். திறமையாகப் பணியாற்ற திட்டமிட்டு செயலாற்ற வேண்டும். உங்கள் சக பணியாளர்களின் ஒத்துழைப்பு கிடைக்காதது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்கள் துணையிடம் பொறுமையின்றி நடந்து கொள்வீர்கள். இதனால் கடுமையான விவாதங்கள் இருவரிடையே ஏற்படலாம். எனவே நட்பான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது.

பண வரவு எதிர்பார்த்த அளவுக்கு காணப்படாது. தேவையற்ற செலவுகள் எழும். பணத்தை சாதுர்யமாக கையாள்வது கடினமாக இருக்கும்.




நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரலாம். இன்று அசௌகரியமாக உணர்வீர்கள். பொறுமையாக இருப்பதன் மூலம் நன்மை அடையலாம்.

பணியில் நீங்கள் தவறுகள் செய்ய நேரலாம். உங்கள் பணிகளை கவனமாகக் கையாள வேண்டும். பணியிடத்தில் உங்கள் திறமைகளை பயன்படுத்த இயலாத நிலை காணப்படும்.

உங்கள் துணையுடன் அன்பான உணர்வுகளை பகிர்ந்து கொள்ள இயலாது. எனவே பொறுமை மேற்கொள்ளுங்கள்.பேசுவதை தவிர்த்திடுங்கள்.

இன்று அதிக செலவுகள் செய்ய நேரலாம். பண இழப்பு காணப்படுகின்றது. எனவே கவனமாக பணத்தை கையாளவும்.




இன்று கடினமான சூழ்நிலை காணப்படும். அது உங்கள் நாளின் சீரான நிலையை பாதிக்கும். கவனமுடன் செயலாற்ற வேண்டும். தனிமை உணர்வு ஏற்பட வாய்ப்புள்ளது. அதனை சமாளிக்க வேண்டும். அமைதி பெற பிரார்த்தனை மேற்கொள்ளுங்கள்.

அதிகப் பணிகள் காணப்படும். நற்பலன்களைக் காண நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரும்.

உங்கள் துணையிடம் கருத்து வேறுபாடு கொள்வீர்கள். உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு ஏற்படுத்த அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

உங்கள் குடும்பத்திற்காக சில தேவையற்ற செலவுகள் செய்வீர்கள். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். எனவே திட்டமிட்டுப் பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்யுங்கள்.




கடினமான சூழ்நிலைகளை கையாள பொறுமை அவசியம். பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதன் மூலம் சாதகமான பலன்கள் கிடைக்கும்.

பணியிடத்தில்பணிகளை மேற்கொள்ளும்போது கடினமான சூழ்நிலை காணப்படும். சக பணியாளர்களுடன் நல்லுறவு பராமரிப்பதிலும் சிக்கல்கள் காணப்படும்.

உங்கள் துணையுடன் பேசும்போது கவனமாகப் பேச வேண்டும். உங்கள் துணையிடம் நீங்கள் உணர்ச்சிவசப்படுவீர்கள். இது உறவின் சமநிலை மற்றும் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

இன்று பணப்புழக்கம் குறைந்து காணப்படும். தேவையற்ற செலவுகள் உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்கள் தாயின் உடல் நிலையில் பாதிப்பு காணப்படும். அதற்காக நீங்கள் பணம் செலவு செய்ய நேரும்.




இன்று மன வலிமை நிறைந்து காணப்படும். எதிர்பாராத நன்மைகள் திருப்தியை அளிக்கும். விருந்தினர்கள் வருகை காரணமாக இன்று நீங்கள் உற்சாகமாக இருப்பீர்கள்.

பணியிடத்தில் உற்சாகமான வாய்ப்புகள் காணப்படும். பணியிடச் சூழல் இனிமையாகவும் மகிழ்ச்சி கரமாகவும் காணப்படும்.

உங்கள் நேர்மையான அணுகுமுறை உங்கள் துணையை மகிழ்விக்கும். உங்கள் துணையிடம் உங்கள் அன்பை வெளிப்படுத்துவீர்கள்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். ஊக்கத்தொகை வகையில் பணவரவு காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று திட ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




உங்கள் இலக்குகளை அடைய இந்த நாள் அனுகூலமாக இருக்காது. அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் உங்களை வைத்திருப்பது நல்லது. இன்று திறமையாக செயலாற்ற அனுசரணையான அணுகுமுறை தேவை.

பணியில் சில தவறுகளை நீங்கள் செய்ய நேரலாம். இன்று பணியில் கவனம் மிகவும் அவசியம்.

சில கருத்து வேறுபாடு காரணமாக தவறான புரிந்துணர்வு காணப்படும். இதனால் உறவுப் பிணைப்பு சற்று பாதிப்படையும்.

இன்று நிதிநிலைமை அபாரமாக இருக்கும். கூடுதல் செலவுகள் காணப்படும். இது உங்களுக்கு அதிருப்தி அளிக்கும்.

இன்று உங்களிடம் பதட்டம் காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 25.12.2025




இன்று சௌகரியங்களை அனுப விக்கும் நாள். இன்றைய நாள் மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கும். இன்று மன வலிமை அதிகம் காணப்படும். குறைந்த முயற்சியில் வெற்றி பெறுவீர்கள்.

பணிகளை குறித்தநேரத்தில் முடிப் பீர்கள். உங்களின் செயல் திறன் சக பணியாளர்களை ஆச்சரியப்பட வைக்கும்.

உங்கள் துணையிடம் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத் திக் கொள்வீர்கள். நீங்கள் இருவரும் நல்லுறவையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்திக் கொள்வீர்கள்.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். இன்றைய நாளை நீங்கள் புதிய முதலீடுகள் செய்வதற்கு பயன்படுத் திக் கொள்ளலாம்.

இன்று உங்களிடம் காணப்படும் மன உறுதி காரண மாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று சற்று கடினமான சூழ்நிலைகள் காணப்படும். உங்கள் அணுகுமுறையில் பொறுமை மற்றும் உறுதி அவசியம். உங்கள் அன்றாட நிகழ்வுகளில் விழிப் புணர்வு தேவை.

பணியிடத்தில் மிதமான பலன்கள் காணப்படும். அதிகப் பணிகள் கவலையை அளிக்கும். அதனால் பணிகளைக் கையாளும்போது கவனக் குறைவு ஏற்படும்.

உங்கள் துணையுடன் குடும்பப் பிரச்சினை ஒன்றை சந்திக்க நேரலாம். குடும்பத்தில் அமைதி மற்றும் நல்லிணக்கம் ஏற்பட ஒருவருக்கொருவர் மனம் திறந்து பேசிக் கொள்ள வேண்டும்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். கூடுதல் செலவுகள் உங்களுக்கு கவலையை அளிக்கும்.




இன்று புதிய மனிதர்களுடன் கலந்துற வாடுவீர்கள். புதிய நண்பர்களை ஏற்படுத்திக் கொள்ள இது உகந்த நாள். அனுபவப் பூர்வமான பாடம் இதன் மூலம் கற்கலாம்.

உங்கள் கடின உழைப்பும் அர்ப் பணிப்பும் நல்ல பலனை பெற்றுத் தரும். உங்கள் நேர்மையான அணுகுமுறை காரணமாக பணியில் சாதிப்பீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பை பகிர்ந்து கொள்வீர் கள். அதன் காரணமாக உங்கள் துணையிடம் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்வீர்கள்.

பணபுழக்கம் அதிகமாக காணப்படும். உங்கள் குடும்பத்துடன் வெளியே செல்லுதல் போன்ற நிகழ்ச்சி களுக்கு பணத்தை செலவு செய்வீர்கள்.




சம்பிரதாய விழாக்கள் மற்றும் ஆன்மீக சொற்பொழிவுகளில் கலந்து கொள்வதன் மூலம் ஆறுதல் மற்றும் நிவாரணம் கிடைக்கும். பிரார்த்தனை மேற்கொள்வதன் மூலம் திருப்தி நிலவும்.

பணியிடத்தில் பதற்றம் காணப்படும். பணியிடத்தில் காணப்படும் கடினமான சூழ்நிலையை கையாள அனுசரணையான போக்கை மேற்கொள்ள வேண்டும். திட்டமிட்டு பணியாற்றுங்கள்.

உங்கள் துணையின் மீது தவறான கருத்து கொண்டி ருப்பீர்கள். இது உங்களுடைய உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும். உங்கள் துணையுடன் நல்லுறவு காண சகஜமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

பண இழப்பு ஏற்படாமல் தடுக்க நீங்கள் முன்கூட்டியே திட்டமிட வேண்டும். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்ய வேண்டும்.

# சீரமைப்புப் பணிகள் காலதாமதமாகிப் பிந்தியமையும் சில குளங்கள் உடைப்பெடுத்தமைக்குக் காரணமாம்!

**(விஜயரத்தினம் சரவணன்)**

ஒப்பந்ததாரர்களால் உரியகாலத் தில் சீரமைப்பு வேலைகள் தொடங் கப்படாமல் பொருத்தமற்ற காலத்தில் மேற்கொள்ளப்பட்ட குளச்சீரமைப்பு வேலைகளால், முல்லைத்தீவு மாவட் டத்தில் கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்குரிய சில சிறிய நீர்ப்பாசனக்குளங்கள் வெள்ள அனர்த் தத்தின்போது உடைப்பெடுத்துள்ளன என வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்நிலையில் காலதாமதமாகச் சீரமைப்பு வேலைகள் தொடங்கப்பட்டு உடைப்பெடுத்த குளங்களுக்குரிய சீர மைப்பு வேலைகளுக்கு தம்மால் மேல திக நிதி வழங்கப்படாதெனத் தெரிவித்த முல்லைத்தீவு மாவட்ட கமநல உதவி ஆணையாளர், ஒப்பந்ததாரர்கள் தமது நிதியைப் பயன்படுத்தியே சீரமைப்புப் பணிகளை முன்னெடுப்பார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெற்ற வெள்ள அனர்த்தப் பாதிப் புத் தொடர்பான விசேட மாவட்ட ஒருங்கி ணைப்புக் குழுக்கூட்டத்திலேயே இவ் விடயம்தொடர்பில் பேசப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் நாடாளுமன்ற உறுப் பினர் ரவிகரன் கருத்துத் தெரிவிக்கை யில் -

உலகவங்கியின் நிதி உதவியில் சீரமைப்பு வேலைகள் தொடங்கப்பட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத் திற்குரிய சிறிய நீர்ப்பாசனக் குளங்கள் உடைப்பெடுத்துள்ளன என அறிகின் றோம்.

இவ்வாறு சீரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்ட குளங்கள் உடைப் பெடுப்பதற்கான காரணமென்ன?

அவ்வாறு உடைப்பெடுத்த குளங்கள் சிலவற்றை நாம் நேரடியாகச் சென்று பார்வையிட்டோம்.

ஒப்பந்ததாரர் உரிய காலப்பகுதி யில் சீரமைப்பு வேலைகளை ஆரம் பிக்காததன் காரணமாகவே குளங்கள் இவ்வாறு உடைப்பெடுத்தன எனவும் எமக்கு முறையீடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இவ்வாறு உடைப்பெடுத்த குளங்க ளின் சீரமைப்பு பணிகள் எப்போது ஆரம்பிக்கப்படும்? - என நாடாளு மன்ற உறுப்பினர் ரவிகரன் கேள்வி எழுப்பினார்.

இந்நிலையில் முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையர் இதன்போது பதிலளிக்கையில் -

ஒப்பந்ததார் உரியகாலத்தில் சீர மைப்பு வேலைகளை முன்னெடுக் காதமையால் இரு குளங்கள் உடைப் பெடுத்துள்ளன. இவ்வாறு உடைப் பெடுத்த குளங்களுக்கு எம்மால் நிதி மேலதிகமாக செலவிடப்படமாட்டாது. ஒப்பந்ததாரர் தமது நிதியைப் பயன் படுத்தியே சீரமைப்புப்பணிகளை மேற் கொள்ளவேண்டுமென ஒப்பந்ததார ருக்கு அறிவித்தல்களை வழங்கயிருக் கின்றோம்.

இவ்வாறு உடைபெடுத்த குளங்களை சிறுபோக நெற்செய்கைக்கேற்றவாறு விரைவாக சீரமைப்புப்புப் பணிகளை மேற் கொள்ளுமாறும் ஒப்பந்ததாரர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

இருப்பினும் சீரமைப்புப்பணிக்கான மண்ணை எடுப்பதற்குப் போக்குவரத்து பாதைக்கான சிக்கல் நிலை காணப்படு கின்றது. எனினும் இன்னும் சில நாள்க ளில் உடைப்பெடுத்த குளங்களைச் சீரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படும் - என்றார்.